# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 72— 1973 අගෝස්තු 10 වැනි සිකුරාදා — 1973.08.10

72 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு ஒகத்து மாதம் 10 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (II அ)—விளம்பரங்கள்

*[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் ... ... ... | 795 | பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் ... | 814 |


## பதவிகள் — வெற்றிடம்

### இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத் தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள்**

1 : 1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். " இலங்கையர் " என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தில் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1 : 2 ஏதாவது ஒரு பதவிக்கான வேட்பாளர், அப் பதவிக்கு சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அல்லது அதனினும் உயர்வான பரீட்சையில் சித்தியடைந்திருப்பது ஆகக் குறைந்த கல்வித் தகைமையென விதிக்கப்பட்டிருக்கு மிடத்து, சிங்கள மொழி மூலம் கல்வி பயின்ற சிங்களவராக இருப்பின் அவர் சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சிங்கள மொழியில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். (1961 ஜனவரி 1 க்கு முந்திய ஒரு திகதியிலிருந்து அரச சேவையில் இருப்போருக்கும் அரச சேவையில் உள்ள பிற பதவிகளுக்கு நியமனத்தை நாடும் அத் தகையோருக்கும் இத் தேவை ஏற்புடைத்தாகாது.)

1 : 3 விதிக்கப்பெற்ற சிங்கள வினைத்திறமைத்திறன் தேர்வினில் சித்தி எய்தத் தவறியமைக்காக தகுதிகூர்/சோதனைக்கான நியமனங்கள் நிறுத்தி வைக்கப்பட்ட " புதிதாகச் சேர்ந்த " அரச உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அப்படி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமாயின் 640 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்தின் நியதிகளுக்கமைவாக விதிக்கப்பெற்ற உயர்ந்த சிங்கள வினைத்திறன் தேர்விலிருந்து விலக்களிக்கும் உரிமையை அவர்களுக்குக் கொடுக்கத்தக்க தகைமையை அவர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

**2. படிகள்**

2 : 1 அரச சேவையில் உள்ள திருமணமான உத்தியோகத்தர்களுக்கு அவர்களது பதவிகளுக்கு ஏற்புடைய திரட்டிய மாத வேதனத்துடன் மேலதிகமாக தாபனக் கோவையின் vii ஆம் அத்தியாயத்தின் I ஆம் பிரிவில் தரப்பட்டபடி விவாகப் படியும் வழங்கப்படும்.

2 : 2 மாத வேதனம் பெறும் அரச உத்தியோகத்தர்கள், அவர்கள் 180 ரூபாவிலிருந்து 250 ரூபா வரையில் (சகல படிகளும் உட்பட) வேதனமாக/கூலியாகப் பெறும் தொகுதியினரைச் சேர்ந்தவராயின், அவர்களுக்கு விசேட படியாக ரூபா 7.50 கொடுக்கப்படும். அது தேவையானவிடத்து சரிசெய்யப்படுவதற்கு உள்ளாகும்.

---

**முக்கிய அறிவித்தல்**

*இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I : தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

*எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1972 ம் ஆண்டு டிசெம்பர் மீ 18 ந் உ.*

---

3. சேவை நிபந்தனைகள் : பொது

3 : 1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக் களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள், ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விடுக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

3 : 2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தி யோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

3 : 3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

4. நிரந்தரப் பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர் களுக்கு ஏற்புடைத்தாகும் சேவை நிபந்தனைகள்

4 : 1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோ கத்தர்கள் மேலே 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந் தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின் வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண் டும் :—

4 : 1 : 1 சகல நியமனங்களும், ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய, மூன்று வருடத்துக் குத் தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத் தில் காரணம் எதும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

4 : 1 : 2 அரசாங்க சேவையில் " புதிதாகச் சேர்ந்த " அரச உத்தியோகத்தர்கள் யாவரும் அரசாங் கத்தின் அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்துக்காக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் செய் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் தற்போதுள்ள எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அல்லது அரசாங்கத்தின் மொழிக் கொள் கைக்கு பயன் ஏற்படும் வண்ணம் இனி மேல் புகுத்தக்கூடிய சட்டங்களுக்கும் விதி களுக்கும் அமையுமாறு வேண்டப்படுவர்.

4 : 1 : 3 சகல அரச உத்தியோகத்தர்களும், தமது தகுதிகூர் காலத்தின்போது அரசகரும மொழியில் வேலை செய்யும் அறிவைப் பெற் றுக்கொள்ளும்படி வேண்டப்படுவர்.

4 : 1 : 4 தகுதிகூர் காலம் நிறைவு எய்திய பின்பு பதவியை உறுதி செய்வது, பிறவற்றுள் நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து முத லாவது வருடத்தினுள் முதலாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் இரண்டு வருடத்தினுள் இரண்டாந்தர சிங் கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்து வதிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வரு டத்தினுள் மூன்றும் தரச் சிங்கள வினைத் திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் தங்கி யுள்ளது. ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம், விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப் படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 4 : 1 : 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத் தாகும் அத்தகைய காலம் வரையில் செய லில் இருக்கும்.

4 : 1 : 5 தகுதிகூர் நிலைக்கால முடிவு வரையில் சிங் கள மொழியில் விதிக்கப்பெற்ற வினைத் திறனை அடையாவிட்டால் தாபனக் கோவை யின் II ஆம் அத்தியாயத்தின் 12 : 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரயோகமாகும்.

4 : 1 : 6 சிங்கள மொழி மூலம் சேர்த்துக்கொள்ளப் பட்டவர்கள் மீது 4 : 1 : 3 ஆம் 4 : 1 : 4 ஆம் 4 : 1 : 5 ஆம் பிரிவுகள் பிரயோகிக்கப் படமாட்டா.

4 : 1 : 7 அரச சேவையின், நிரந்தரமான பதவி யொன்றில் ஏற்கனவே பதவி உறுதி செய் யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவி யொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல் பாகவே தகுதிகூர் நிலையில் இருக்கவேண் டியதில்லை.

4 : 1 : 8 தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத் திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய் வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்ப தனைச் சோதனை செய்து அறிவதற்கு அவர் கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவ பரிசோதனைக்கு உட் படல் வேண்டும்.

5. நியமன நியதிகள்

5 : 1 அரச சேவையில், நிரந்தரமான பதவிகளிலா யினும் மாதச் சம்பளமுள்ள தற்காலிக பதவிகளிலா யினும் 1.1.72 க்குப் பின்பு நியமனம் பெற்ற அரச உத்தியோகத்தர்கள் (நாட் சம்பளம் கொடுக்கப்படுபவர்கள் நீங்கலாக) யாவரும் தமது திரட்டிய வேதனத்தின் 6 சத வீதத்தை அரசாங்க சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்துதல் வேண்டும். அரசாங்கம் நிதியாண்டின் இறு தியில் கொடுக்கப்படும் திரட்டு வேதனத்தின் 9 சத வீதத்தைக் கொடுத்துதவும். அத்தகைய பதவியை வகிப் பவர் (அவர் விரும்பினால்) அவரது மாதத்திரட்டு வேதனத் திலிருந்து 6 சத வீதம் வரையில் அவரது விருப்பப்படி, சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்தலாம். ஆனால் அத்தகைய உதவு தொகை மீது அரசாங்கம் எந்தவித தொகையும் செலுத்தாது.

5 : 2 1971.12.31 க்கு முன்பு அரச சேவையில் ஓய் வூதியமுள்ள நிரந்தரமான பதவிகளை வகித்த அரச உத்தியோகத்தர்கள் 1972.1.1 க்குப் பின்பு அச்சேவையில் உள்ள நிரந்தரமான பதவிகளில் நியமிக்கப்பட்டால் அவர் கள் அவர்களது ஓய்வூதிய உரிமைகளை வைத்திருப்ப தற்கு அனுமதிக்கப்படுவார். அத்தகைய அரச உத்தி யோகத்தர்கள் முன்பு போல விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு பணம் செலுத்துதல் வேண்டும்.

6. யுத்த சேவைச் சலுகை

6 : 1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண் டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப் படைகளில் சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர் பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள், அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காது

விடின், **1939** ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் **3** ஆம் திகதியிலிருந்து **1949** ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் **31** ஆம் திகதி வரையில் உள்ள அச் சேவைக் காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் **1946** ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் **15** ஆம் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன், அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருந்திருத்தல் வேண்டும்.

### 7. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்

**7 : 1** எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

**7 : 2** வேட்பாளர்கள், குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

**7 : 3** ஒரு வேட்பாளரைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய வேட்பாளரைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

**7 : 4** விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப் பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவு செய்யப்பட்ட பின்பு அப் பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

**7 : 5** விளம்பரத் தேவைகளுக்கு அமைவுபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

### 8. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை

**8 : 1** தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும்; அதில், பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

---

*இல. : 2/1/45*

**கமத்தொழிற்றிணைக்களம்**

*விவசாய உத்தியோகத்தர் பதவி*

*விவசாயத் திணைக்களத்திலுள்ள விவசாய உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த விளம்பரத்தில் கீழ் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்தில் எழுதப் பெற்று செயலாளர், விவசாய காணி அமைச்சு, 315, வக்சோல் வீதி, த. பெ. 569, கொழும்பு 2 என்ற முகவரிக்கு பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.*

*(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 1973 ஆகஸ்ட் மாதம் 31 திகதி.*

*(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1973 ஆகஸ்ட் மாதம் 31 திகதி.*

*குறிப்பு.—(1) மாதிரி விண்ணப்பப் பத்திரத்தின்படி தயாரிக்கப்படாத விண்ணப்பப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.*

*(2) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகி விட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பம் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாளராவர்.*

*(3) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலங்களிற் பெற்றுக்கொள்ளலாம். இவ்வபேட்சகர்கள் விரும்பினால், விண்ணப்பப் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டிற்கு மிகக் கிட்டவுள்ள இலங்கை பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை விவசாயக் காணி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.*

*(4) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாடுகளிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலமுடையவர்களாயிருக்கிறார்களாவென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்கு பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.*

*2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதாகும். உதவுதொகைகளை அரசாங்க சேவைச் சகாய நிதிக்குச் செலுத்துதல் வேண்டும். இந்நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்குட்பட்டதாகும்.*

*3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—*

*ஆண்டொன்றிற்கு ரூபா 6,720 ல் ஆரம்பமாகி வருடம் ரூபா 360 ஐக் கொண்ட 12 வருட உயர்வுகளாலும், ரூபா 480 ம் கொண்ட 11 வருட உயர்வுகளாலும் ரூபா 16,320 வரை உயரும். 8,880 க்கும், 11,520 க்கும், ரூபா 14,880 க்கு முன்பும் வினைத்திறமைகாண் தடையுண்டு.)*

*குறிப்பு.—ரூபா 11,520 வினைத்திறமைகாண் தடைக்கு மேலாக, பதவி உயர்வு பெற விரும்பும் எல்லா **உத்தியோகத்தரும்** குறிக்கப்பட்ட அரசாங்கப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.*

*4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்.*

*(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடையவராயுமிருத்தல் வேண்டும்.*

*(ஆ) 1973.08.31 நாளுக்கு வயது 22 க்கு குறையாமலும் 30 க்கு அதிகரிக்காமலும் இருக்க வேண்டும்.*

*(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விவசாயம் சம்பந்தப்பட்ட 1 ம் அல்லது 2 ம் வகுப்பு விசேட பட்டதாரியாக இருக்க வேண்டும்.*

*5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும் பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—*

*(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு.**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்பட மாட்டாது.)*

*(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்,*

*(இ) குணச்சான்றிதழ் இரண்டு, இவற்றிலொன்று பாடப்பணிப் பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்,*

*(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/ உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்,*

(உ) சிங்களத்தில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(1) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக் கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், (IIஅ) ம் பிரிவில் வெளியிடப்பட்டுள; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பகாரிகளுக்கு விண்ணப்பம் பெற்றமைபற்றி அறிவிக்கப்படும். இத் தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து இரண்டு கிழமைகளுள் விண்ணப்பம் பெற்றமைபற்றிய அறிவித்தலைப் பெருவிடின் உடனே, எனக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பகாரர் தமது விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையவராகார்.

ஏ. டீ. எம். சில்வா,
செயலாளர்,
விவசாயக் காணி அமைச்சு.

விவசாயக் காணி அமைச்சு,
315, வோக்சோல் வீதி,
த. பெ. இல. 569,
கொழும்பு 2,
1973.7.27.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

(சாதனங்களையோ சாதனங்களின் படிகளையோ விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் ஆகாது)

கமத்தொழிற்றிணைக்களம்

**விவசாய உத்தியோகத்தர் பதவி**

1. முழுப் பெயர் :————.
(தெளிவான எழுத்துக்களில்)

2. அஞ்சல் முகவரி :————.
(அஞ்சல் முகவரியில் மாற்றம் ஏற்றம் ஏற்பட்டால் உடன் அறிவிக்கப்படுதல் வேண்டும்)

3. (அ) பிறந்த திகதி :—
வருடம் :————. மாதம் :————. நாட்கள் :————.

(ஆ) உள்ளூர் விண்ணப்பங்கள் முடிவடையும் திகதியிலன்று சரியான வயது :————.

4. நீர் இலங்கைப் பிரசையா? வம்சாவழி அல்லது பதிவுப் பிரசையா? எனக் குறிப்பிடுக :————.
(இலங்கைப் பதிவுப் பிரசையானால் பத்திரத் தொடர்பு இலக்கமும் திகதியும் குறிப்பிடுக)

5. பிறந்த இடம் :—

(அ) விண்ணப்பகாரர் :————.
(ஆ) விண்ணப்பகாரரின் தந்தை :————.
(இ) விண்ணப்பகாரரின் தந்தை வழிப்பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பூட்டன் :————.

குறிப்பு.—விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) க்கு மேலதிகமாக (ஆ), அல்லது (இ) உம் (ஈ) உம் சேர்த்து நிரப்பப்படுதல் வேண்டும். அவர்/அவள் இலங்கையிற் பிறக்காத விடத்து (அ) க்கு மேலதிகமாக (ஆ) உம் (இ) உம் என்பனவோ அல்லது (இ), (ஈ) என்பனவும் நிரப்பப்படல் வேண்டும்.

6. (அ) ஆணா? பெண்ணா? ————.
(ஆ) விவாகமானவர், தனிப்பட்டவர், விதவை, தாரமிழந்தவர் :————.

7. (1) சிங்களம் (2) தமிழ் (3) ஆங்கிலம் இவற்றில் சித்தியடைந்த ஆகக் கூடிய பரீட்சை :————.

8. 12 ஆம் வயதிலிருந்து படித்த பாடசாலைகள், கல்லூரிகள் வேறு கல்வித் தாபனங்கள் :—

பொதுக் கல்வி
பாடசாலைக் கல்லூரி-தொட்டு-முடிய

1. ————.
2. ————.

உத்தியோகக் கல்வி
கல்வித்தாபனம்-தொட்டு-முடிய

1. ————.
2. ————.

9. விளையாட்டுகளின் விபரங்களும், மற்றும் அதில் பெற்ற திறமை நகமைகளும், அத்துறையில் பதவிவகித்த பொறுப்பான உத்தியோகத்தின் விபரங்களும் :————.

10. நீர் கடன் தொல்லைகள் இல்லாதவரா? கடன் பொறுப்புகள் இருக்கும் பட்சத்தில் கடன் பொறுப்புகளின் அளவுகள் என்ன? :————.

11. சட்ட நீதிமன்றங்களில் ஏதாவது குற்ற பாதகத்திற்குக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறீரா? அப்படியானல் வழக்கு இலக்கத்தை எடுத்துக்காட்டி திகதிகளோடு முழு விபரங்களையும் குறிப்பிடுக :————.

12. பாடசாலைக் கல்வி, உத்தியோகக் கல்வித் தகைமைகள் : (பல்கலைக்கழகத்து சகல பட்டங்கள், திறமைகள், உத்தியோகக் கல்வித் தகைமைகள் முதலியவற்றின் விபரங்களைத் திகதி, சித்தி, தாம் இருந்தால் அவை எடுத்த பாடங்கள் கல்வித் தாபனப் பெயர்கள் இவற்றுடன் தருக)

13. இப்போதய தொழிலும் முன்னர் ஏதேனும் பதவியிலிருந்தால் அப்பதவிகளும் :————.
(பதவி ஏற்றுக்கொண்ட திகதியும், விட்டு விலகிய திகதியும், கடைசியாகப் பெற்ற ஆண்டுச் சம்பளமும் குறிப்பிடப்படல் வேண்டும்)

| பதவி | தொட்டு முடிய | ஆண்டுச் சம்பளம் |
|---|---|---|
| 1. ————. | ———— | ———— |
| 2. ————. | ———— | ———— |
| 3. ————. | ———— | ———— |

முக்கியம்.—அரசாங்க உத்தியோகத்திலிருந்து நீக்கிய காரணம் மேலுள்ள 15 ஆம் நிரல் பிரிவில் குறிப்பிடப்படல் வேண்டும்.

14. விசேட தகைமைகள்.—அறிவித்தலில் குறித்துக் காட்டிய விசேட தகைமைகள் அல்லது அனுபவம் உடையவரா? அப்படியானல் அவற்றின் முழு விபரங்களைத் திகதிகளுடன் தருக. அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் ஏதாவது விசேட தேவைகள் குறித்துக் காட்டப்பட்டிருந்தால் பார்க்குக :————.

15. மேலும் வேறு விபரங்கள் :————.

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னல் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன். இதனுள் அடங்கியிருக்கும் விபரங்கள் எவையேனும் பொய்யானவை, சரியற்றவை என்று தெரிவு செய்யப்படுமுன் அறிந்தால் தகுதியற்றவனுக்கப் படுவேன் என்றும் நியமனம் பெற்ற பிற்பாடு சரியற்றவையென்று கண்டு பிடிக்கப்பட்டால் நட்ட ஈடு எதுவுமின்றிப் பதவியால் நீக்கப்படுவேன் என்றும் நான் அறிந்திருக்கிறேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

(விண்ணப்பகாரர் அரசாங்க சேவையில் இருப்பவரெனின் அப்பகுதித் தலைவரின் அறிக்கை)

————,
திணைக்கள/அமைச்சு தலைவரின் கையொப்பம்.

திகதி :————.

8-366—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72

எண் : பொ. நி/3/434

## கல்வி அமைச்சு

### விஞ்ஞான பாட போதனாசிரியர் பதவி

கல்வி அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்வி நிலையங்களில் விஞ்ஞான பாட போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. விண்ணப்பங்கள், கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறை யில் தயாரிக்கப்பட்டு 1973 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 27 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக செய லாளர் (பொது நிருவாகக் கிளை), கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2" என்ற விலாசத்துக்கு பதிவுத் தபால் மூலம் அனுப் பப்பட வேண்டும். காகித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "விஞ்ஞான பாட போதனாசிரியர் பதவிக்கான விண்ணப்பம்" எனத் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி கள் நிரந்தரமானவை. நியமனங்கள் சேமலாப நிதி அடிப் படையில் அமையும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் தனது சம்பளத்தில் 6% த்தை அரசாங்க சேவை சகாயநிதிக்குச் செலுத்த வேண்டும். இதற்கான அரசாங்கத்தின் உதவு தொகை 9% ஆகும். நியமனங்கள் சாதாரணமாக 3 வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும்.

எனினும், நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையது மான பதவி ஒன்றினை ஏலவே வகிக்கும் ஓர் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படின், உபகாரச் சம்பளத்துக்கான அவரது உரி மைகள் பாதுகாக்கப்படுவதுடன் ஒரு வருட காலத்துக்குப் பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படுவார்.

3. **தகவுத்திறன் :** விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவரும் பின் வரும் தகைமைகளுடையவரெனத் திருப்தியான முறையில் நிரு பிக்க வேண்டும் :—

(i) 1973 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 27 ஆந் திகதியன்று 40 வயதுக்கு மேற்படாதவராயும் 21 வயதுக்குக் குறையாத வராயும் இருக்க வேண்டும் (இவ்வயதுக்கட்டுப்பாட்டின் மேலெல்லை ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர் களுக்கு அமையாது).

(ii) சிறந்த நல்லொழுக்கமும் தேகாரோக்கியமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(iii) பின்வரும் தகைமையைப் பெற்றிருக்க வேண்டும்.
பௌதிகவியல், கணிதம் (தூயகணிதம் அல்லது பிர யோக கணிதம்) ஆகிய பாடங்களுடன் அங்கீகரிக்கப் பட்ட ஒரு பல்கலைக் கழகப்பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு : கற்பித்தல் அனுபவம் பெற்றிருத்தல்/மேற்கூறிய பாடங்களுடன் இரசாயனவியல் சேர்ந்த பட்டம் பெற்றி ருத்தல் அல்லது இவ்விரு தகைமைகளையும் பெற்றிருத் தல் மேலதிக தகைமைகளாகக் கணிக்கப்படும்.

(iv) உரிய பாடத்தில் போதிய செயல்முறை/கற்பித்தல் அனுப வம் அல்லது இவ்விருவகை அனுபவம் பெற்றிருக்க வேண் டும் (கீழுள்ள 4 ஆம் பந்தியையும் பார்க்கவும்)

(v) சிங்களத்தில் கற்பிக்கக்கூடியவராய் இருத்தல் வேண்டும். அல்லது நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக் குள் சிங்களத்தில் கற்பித்தற்கான தேர்ச்சி பெற வேண் டும்.

4. **சம்பள அளவுத்திட்டம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய வருடாந் தச் சம்பள அளவுத் திட்டம் ரூ. 6,024—4/144—8/180—3,040 ஆகும். 5 வருடத்துக்குக் குறைந்த அனுபவம் பெற்றுள்ள விண் ணப்பதாரி ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து, வேண்டிய அனுப வத்தைப் பெறும்வரை பதில் கடமை புரிபவராக திரட்டிய மாறுத வருடாந்தச் சம்பளம் ரூ. 6,024/ உடன் நியமிக்கப்படுவார். நிய மதாரிகள், திரட்டிய சம்பள அளவுத் திட்டத்திலான ரூ. 6,780/, ரூ. 7,500/- ஆகிய சம்பளப் படிகளைத் தாண்டிச் செல்லுமுன் வினைத்திறமைகாண் பரீட்சைகளில் தேறவேண்டும். (1.10.69 க்கு முன்னரான ஒத்த சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு: ரூ 3,420—4/120—8/180—5,340/-)

5. அரசினர் சேவையிலுள்ள, தகைமையுடைய அபேட்சகர் களின் விண்ணப்பங்கள் தத்தம் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப் பப்பட வேண்டும். விதிக்கப்படும் திகதிக்குப் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. விதிக்கப்படும் திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளப்படும் எவ்விண்ணப்பமும் விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவை உரிய பகுதித் தலைவரால் பெற் றுக் கொள்ளப்பட்டனவென்றும், நியாயமான காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக் கொள்ளுமாறு அவர் சிபார்சு செய்தா லன்றி, ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. எனினும், ஒவ்வொரு விண் ணப்பதாரியும் விண்ணப்பத்தின் ஒரு பிரதியை விதிக்கப்படும் திகதிக்கு முன் இவ்வமைச்சுக்கு நேரே அனுப்ப வேண்டும்.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளையல்ல) இணைத்தனுப்ப வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு.—சமயதீட்சைச் சான்றி தழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக் குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.)

(ஆ) கல்வித் தராதரப் பத்திரங்கள்.

(இ) உயர்தொழில்/தொழில்நுட்பத் தராதரப் பத்திரங்கள்.

(ஈ) விண்ணப்பதாரியின் தகைமைகள், ஒழுக்கம், இப்பதவிக்கு நியமிக்கப்படுதற்கான அவருடைய தகுதி ஆகியவற்றைக் குறிப்பிடும் மூன்று சமீபகால நற்சாட்சிப் பத்திரங்கள். (அரசினரின் கீழ் ஏற்கனவே சேவையிலுள்ளவர்களைப் பொறுத்தளவில் இவை சமர்ப்பிக்கப்பட வேண்டியதில்லை).

7. விண்ணப்பங்களும் ஏனைய உரிய சாதனங்களேனும் கடிதங்க ளேனும் இவ்வமைச்சின் செயலாளரின் உத்தியோக விலாசத் துக்கே அனுப்பப்பட வேண்டும்; எக்காரணத்தையிட்டும் அவை கள் எவ்வுத்தியோகத்தரினதும் சொந்தப் பெயருக்கு அனுப்பப்பட லாகா.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக் குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ம் பாகம், (IIஅ) ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ள; அவற்றைப் பார்க்க.

9. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டதாக விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படு வார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள் ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பெறத்தவ றும் விண்ணப்பதாரிகள், கல்வி அமைச்சின் செயலாளருக்கு (பொது நிர்வாகக் கிளைக்கு) அது பற்றி உடனே அறிவிக்க வேண் டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

பொது நிர்வாகக் கிளை
கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
27.07.1973.

### விண்ணப்ப மாதிரிப் படிவம்

(8½"×13½" அளவு அரைத்தாள்களில் தயாரிக்கப்பட வேண் டியது)

**கல்வி அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்வி நிலையங்களில் விஞ்ஞான பாட போதனாசிரியர் பதவி**

1. பெயர் (முதலெழுத்துக்களுடன்) : திரு/திருமதி/செல்வி : ——————.

2. முழுப்பெயர் :——————.

3. உத்தியோக முகவரி :——————.

4. சொந்த முகவரி :——————.

5. (அ) இலங்கையரா ? :——————.
(ஆ) அங்ஙனமாயின், வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா ? :——————.

6. பிறந்த திகதி : வரு.———, மாதம்———, நாள்———.

7. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன் றுள்ளபடி சரியான வயது : வரு.——, மா.——, நா.——.

8. தற்போதய பதவி பற்றிய விபரங்கள் :——————.
(அ) பதவி :——————.
(ஆ) நிரந்தரமா தற்காலிகமா ? :——————.
(இ) உபகாரச் சம்பள உரித்துடையதா அற்றதா :——————.
(ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறீரா ? :——————.
(உ) திணைக்களம் :——————.
(ஊ) நிலையம்/வேலை இடம் :——————.
(எ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுதிட்டம் :——————.
(ஏ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டத்திலான தற்போதய படி :——————.

9. கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்கள் :————.

| பரீட்சை | வருடம் | பாடங்கள் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

10. உயர்தொழில்/தொழில்நுட்பத் தகைமைகள் பற்றிய விபரங்கள் :————.

| தராதரப் பத்திரம் | வழங்கியவர் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

11. பொதுக் கல்வி கற்ற நிலையங்கள் :————.

| நிலையம் | வருப்பு | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2, | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7 | | | |

12. தொழில்நுட்ப/உயர்தொழில் கல்வி கற்ற நிலையங்கள் :——.

| நிலையம் | பின்பற்றிய பயிற்சி நெறி | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

13. முன்னைய நியமனங்கள் (காலவரன் ஒழுங்கில் சுருக்கமாகக் கொடுபடவேண்டியது :————.

| திணைக்களம் | நிலையம்/வேலை இடம் | பதவி | நிரந்தரமா தற்காலிகமா | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |
| 2. | | | | | |
| 3. | | | | | |
| 4. | | | | | |
| 5. | | | | | |
| 6. | | | | | |

14. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் சவறுக்காக யாதேனும் குற்றத்தீர்ப்பு உம்மீது அளிக்கப்பட்டதா ?
(அங்ஙனமாயின், விபரங்களைக் கொடுக்கவும்)

15. விண்ணப்பதாரி அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டவரா ? :————.
(அங்ஙனமாயின் விபரங்கள் கொடுக்கவும்)

16. விண்ணப்பதாரி பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின் எவ்வளவுக்கு ? :————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக்காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

8-390—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72.

---

இல : இஎஸ் 1/16/4

**பொறியியற் சேவைச்சபை**

**இலங்கைப் பொறியியற் சேவை III ஆம் வகுப்பு சிவில் பொறியியலாளர்க்கான வெற்றுப்பதவிகள்**

இலங்கைப் பொறியியல் சேவை III ஆம் வகுப்பில் சிவில் பொறியியலாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பொறியியற் சேவைச் சபை அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர், பொறியியற் சேவைச் சபை, செயலகம், கொழும்பு 1 என்னும் முகவரியை 1973, ஆகஸ்ட் மாதம் 31 ஆந் தேதியன்றோ அதற்கு முன்னரோ வந்தடைதல் வேண்டும்.

குறிப்பு.—(i) அச்சிட்ட விண்ணப்பப்படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்பவர் 8″×4″ அளவுக்குக் குறையாத முத்திரையிடாத உறையில் தமது சொந்த முகவரியை எழுதி அனுப்புவதுடன் அப்பரீட்சார்த்தி அரசாங்க சேவையிலுள்ளவரோ அன்றோ என்பதையுந் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலிற் தவறிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் தேதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்புடையவராவர்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—(i) பதவிகள் நிரந்தரமானவையும் ஓய்வூதியத்துக்குரிமையற்றவையுமாகும். அரசாங்கச் சேவைச் சகாய நிதியத்துக்கு உதவுதொகை செலுத்தப்படும்.

(ii) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்தி தீவின் எப்பகுதியிலும் சேவை செய்யுமாறு கேட்கப்படின் அவ்வாறு சேவை செய்தல் வேண்டும்.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் 1972.3.14 ஆந் தேதியின் 15,001/8 ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கை அரசாங்க அதிவிசேடச் செய்திமடலில் வெளியிடப்பட்ட சிவில் பொறியியல் தொகுதிகள் ஏழுள் எவற்றிலொன்றுக்கேனும் நியமிக்கப்படுவர். எனினும் முதல் எட்டு ஆண்டுகளில் உத்தியோகத்தர்கள் ஒரு தொகுதியிலிருந்து மற்றொன்றுக்குத் தற்காலிகமாக மாற்றப்படுவதற்கு ஆளாவர்.

(iv) பிற நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் 1972.3.14 ஆந் தேதியின் 15,001/8 ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கை அரசாங்க அதிவிசேடச் செய்திமடலில் வெளியிடப்பட்ட இலங்கை பொறியியற் சேவைப் பிரமாணக் குறிப்புகளில் விதித்துள்ளவற்றுக்கேற்றனவாயிருக்கும்.

3. சம்பள அளவுத் திட்டம்.—இப்பதவிக்கான திரட்டிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு : ஆண்டொன்றுக்கு 8,160 ரூபா—360 இல் 3—9,240 ரூபா/9,960 ரூபா—360 இல் 3—11,040 ரூபா—480 இல் 13—17,280 ரூபா, ஆண்டொன்றுக்கு 9,960 ரூபாவுக்கும் 13,920 ரூபாவுக்கும் முன்னர் வினைத்திறமைகாண் தடையுண்டு.

குறிப்பு.—(i) முழு உயர்தொழில் தகைமையுடைய பரீட்சார்த்திகள் ஆண்டொன்றுக்கு மேற்கூறிய சம்பள அளவுத் திட்டத்தில் 10,320 ரூபா தொடக்கச் சம்பளத்தில் நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராவர்.

(ii) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் ஆண்டொன்றுக்கு 9,960 ரூபா பெறுவதற்கு முன்னர் I ஆம் வினைத்திறமை காண் தடைக்கு மேல் பதவியேற்றம் பெறுவதற்கு விதிக்கப்பட்டுள்ள ஒரு சோதனையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். இச்சோதனையின் பாடவிதானமும் திட்டமும் பொறியியல் சேவைச் சபையினால் விதிக்கப்படும்.

முழு உயர்தொழில் தகைமையுடன் சேவையிற் சேரும் பரீட்சார்த்தி நியமன நாளிலிருந்து ஈராண்டுக்காலத்துள் இச் சோதனையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்தி ஆண்டுக்கு 13,920 ரூபாவுக்கு முன்னருள்ள 2 ஆம் வினைத்திறமைகாண் தடைக்கு மேல் பதவியேற்றத்துக்கான தகைமை பெறுவதற்கு பொறியியல் சேவைச் சபையினால் விதிக்கப்பட்ட முழு உயர் தொழில் தகைமை பெறுமாறு வேண்டப்படுவர்.

(iv) அரசாங்க சேவையில் ஏலவேயுள்ளவரான தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்தி ஒருவரின் சம்பளம் அரசாங்கத் தாபனங்கள் பற்றிய கோவையின் 7 ஆம் அத்தியாயத்திலுள்ள விதிகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

4. தகைமைகள்.—விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் சமர்ப்பிக்க வேண்டிய திருப்திகரமான சான்று ; அவர்,

(i) சிறந்த நற்குணமும் உடல் நலமும் உடையவர் ;

(ii) 1973, ஆகஸ்ட் மாதம் 31 ஆந் தேதியில் 21 வயதிற்குட் படாதவராயும் 35 வயதிற்கு மேற்படாதவராயும் உள்ளவர். (அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு மேல் வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது),

(iii) (அ) இலண்டன் சிவில் பொறியியல் நிறுவகத்தில் கூட்டு உறுப்பினர் அல்லது உறுப்பினர் தகைமை பெற்றுள்ளார் ; அல்லது

(ஆ) இலங்கைப் பல்கலைக்கழகத்து சிவில் பொறியியலாளர் பட்டம் அல்லது அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் எவற்றிலிருந்தும் சமமதிப்புள்ள பட்டம் ;

அல்லது

(இ) (இலண்டன்) சிவில் பொறியியலாளர் நிறுவனத்தின் 1, 2 ஆம் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார் அல்லது இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் சிவில் பொறியியலாளருக்கான பரீட்சையில் பகுதி 1, 1 ஆ, 2 ஆம் பரீட்சையின் அல்லது அதற்குச் சமமானவற்றில் சித்தியடைந்துள்ளார் ; அல்லது

(ஈ) கட்டுப்பொத்தை தொழில்நுட்பக் கல்லூரியின் ஐந்தாண்டு டிப்புளோமா பெற்றுள்ளார் அல்லது அதேபோன்ற சமமதிப்புள்ள டிப்புளோமா பெற்றுள்ளார் ; அல்லது

(உ) இலங்கை பொறியியல் நிறுவனத்தின் சிவில் பொறியியல் தொகுதியில் கூட்டுறுப்புரிமை (என். ஐ. இ. இலங்கை) அல்லது உறுப்புரிமை (எம். ஐ. இ. இலங்கை) பெற்றுள்ளார் ; என்பதாகும்.

5. பரீட்சார்த்திகள் பின்வரும் சாதனங்களில் எதையேனும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கப்படும் பொழுது அவைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச்சான்றிதழ் (முக்கிய குறிப்பு.—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக்கழகப் பட்டம் அல்லது உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) பண்புச் சான்றிதழ் இரண்டு இவற்றில் ஒன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி அதிபர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர்தொழில் தகைமை அல்லது தொழிநுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(i) சாதனங்களையாயினும் அல்லது சாதனங்களின் பிரதிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தலாகாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள அலுவலாளர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் தாம் விண்ணப்பம் அனுப்பிய தேதியை பொறியியற் சேவைச் சபைப் பணிப்பாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் தேயன்று அல்லது அதற்கு முன் பணிப்பாளரை அடையக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ('ஆ' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் பணிப்பாளர் பொறியியல் சேவைச் சபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த அலுவலாளருக்காயினும் நேராக அனுப்புதலாகாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்தச் செய்திமடலில் முதலாம் பாகம் இரண்டாம் பிரிவில் வெளியிடப்பட்டிருப்பதைப் பார்க்க.

9. விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ('அ' எனக் குறிப்பிடப்பட்டுளது) அதனுள் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் பெறப்பட்டமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் தேதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவித்தலைப் பெருவிடின் உடனே பொறியியற் சேவைப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி எழுதத்தவறும் விண்ணப்பகாரர் தமது விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை ஏதும் உடையவராகார்.

பி. எச். சிறிவர்த்தன,
பொது நிருவாகம், உள்ளூராட்சி,
உண்ணாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

பொறியியற் சேவைச் சபை அலுவலகம்,
செயலகம், கொழும்பு 1,
ஜூலை 30,1973.

8-490—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72.

---

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

பொல்கொல்லை கூட்டுறவுக் கல்லூரியில்

நூலகப் பொறுப்பாளர் பதவி

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கூட்டுறவுக் கல்லூரியில் நூலகப் பொறுப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் இவ்வர்த்தமானியில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கமைய தயாரிக்கப்பட்டு, " கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர். த. பெ. இல. 419, கொழும்பு 1" என்ற முகவரிக்கு, 1973 ஓகஸ்ட் 25 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் " நூலகப் பொறுப்பாளர் பதவிக்காய விண்ணப்பம் " என்று தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

குறிப்பு :

(1) மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(2) விண்ணபப்படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறும் குறைபாடு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பம் அனுப்புவதற்கு கடைசித் திகதி வரை பொறுத்திருப்பவர்கள் அதனுல் ஆகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்,

2. தொழில் நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.— (1) இப்பதவி நிரந்தரமானது. இந்நியமனம் சகாயநிதி அடிப்படையில் செய்யப்படும். நியமனம் பெறுபவர் அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு சம்பளத்தின் 6 வீதத்தினை உதவு தொகையாக அளிக்க வேண்டும். அரசாங்க உதவு தொகை அவருடைய திரட்டிய சம்பளத்தின் 9 வீதமாகும். ஏற்கனவே அரசாங்க சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமான பதவிகளை வகிக்கும் அபேட்சகர் ஓய்வூதிய உரிமைகளைத் தொடர்ந்து பெறுவர்.

(2) (அ) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் மூன்று வருடகாலத்திற்கு தகுதிகாண் நிலையில் வைக்கப்படுவார்கள். அரசாங்க சேவையில் நிரந்தரமான நியமனத்தை வகிக்கும் உத்தியோகத்தரொருவர் தெரிவு செய்யப்பட்டால் அவர் குறிக்கப்பட்ட காலத்திற்குப் பதிற் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்படுவார்.

(ஆ) அரசசேவையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் ஒரு வருடகாலத்திற்கு தகுதிகாண் நிலையில் வைக்கப்படுவார்கள். இக்கால எல்லையின் இறுதியில் அவர் தகுதியானவரெனக் கருதப்பட்டால், அப்பதவியில் அவர் உறுதிப்படுத்தப்படுவார். பதிற் கடமையாற்றுங் காலத்தின் போது அவர் அப்பதவிக்குத் தகுதியற்றவரெனக் கருதப்பட்டால் அவரது நிலையான பதவிக்கு அவர் திருப்பி மாற்றப்படுவார்.

3. சம்பளமும் படிகளும்.—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவு பின்வருமாறு :—ரூபா 6,600/- இல் ஆரம்பமாகி வருடம் ரூபா 180/- ஐக் கொண்ட 8 வருட ஏற்றங்களாலும் வருடம் ரூபா 240/- ஐக் கொண்ட 6 வருட ஏற்றங்களாலும் ரூபா 9,480/.

வரை உயரும். (இச்சம்பளவளவு 1.10.1969 க்கு முன்பு இருந்த அடிப்படைச் சம்பள அளவுத் திட்டம் ரூபா 3,900/. 180×8—240×6——6,780 க்குச் சமமானதாகும்.)

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின் வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நல முடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்காய இறுதித் திகதி யன்று 25 வயதுக்குட்படாமலும் 40 வயதுக்கு மேற் படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கெனவே அரச சேவையில் உள்ளவர்களிடமிருந்து பெறும் விண்ணப்பங் கள் வயதுக் கட்டுப்பாடு வேறுமையின்றிக் கவனிக்கப் படும்.)

(இ) ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின், பொருளா தாரவியலில் அல்லது வர்த்தகவியலில், பெற்றுள்ள பட் டம் அல்லது பொருளாதாரவியலினை அல்லது வர்த்தக வியலினை ஒரு பாடமாகக் கொண்ட கலை மானிப்பட்ட முடையவராயிருத்தல் வேண்டும்.

**குறிப்பு :**—நூலகவேலை, நூலகங்களை நிர்வகித்தலிலும் கட்டுப் படுத்தலிலும் பெற்றுள்ள அனுபவம், ஆங்கிலம் சிங்களம், தமிழ் தவிர்ந்த வேறு மொழிகளில் பெற்றுள்ள அறிவு முதலியன மேலதிகத் தகைமைகளாகக் கருதப்படும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கியம்.**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாட சாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங் கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.)

(ஆ) பல்கலைக்கழகப்பட்டம் அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) குணச்சான்றிதழ்கள் இரண்டு.—இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர் அல்லது கல்லூரி ஆசிரியர் அல்லது பேரா சிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) உயர்தொழிற் தகைமைக்காய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

(ஊ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் தவிர்ந்த வேறு மொழிகளிற் பெற்றுள்ள அறிவு சம்பந்தமான சான்றிதழ்.

**பின்குறிப்பு.**—(1) ஒரு வித சாதனங்களும் அல்லது சாதனங் களின் பிரதிகளும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப் பட்டிருத்தல் ஆகாது.

(2) சாதனங்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பிக்குமாறு வேண் டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட் சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரச சேவையில் அல்லது அரச கூட்டுத்தாபனங்களிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்கள அல்லது அரச கூட்டுத்தாபனத் தலைவர்களூடாக அனுப்புதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும், " ஆணையாளர், கூட்டுறவுத் திணைக்களம் " என முகவரியிட்டு அனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்புதல் ஆகாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ஆம் பாகம் (IIஅ) ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

9. எல்லா விண்ணப்பப்பத்திரங்களும் கிடைத்ததாக அறிவிக் கப்படும். விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியிலிருந்து மூன்று வாரங்களுள் விண்ணப்பப்பத்திரம் கிடைக்கப்பட்டதான அறிவித்தல் ஏதும் பெற்றுக்கொள்ளாவிடின் எனக்கு அதுபற்றி உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

ஆர். பி. ராஜகுரு,
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரும்.

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்,
டியூக் வீதி,
கொழும்பு 1.
1973, ஜூலை 26 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப் படிவம்

(ஒரு வித சாதனங்களும் சாதனங்களின் பிரதிகளும் விண் ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படலாகாது.)

**கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்**

கூட்டுறவுக் கல்லூரியில் நூலகப்பொறுப்பாளர் பதவி

1. முழுப்பெயர் (தெளிவான எழுத்தில்) :————.

2. முகவரி (முகவரியில் ஏதேனும் மாற்றமேற்படின் உடனடி யாக அறிவித்தல் வேண்டும்) :————.

3. (அ) பிறந்த திகதி :————.
 வருடம் ———— மாதம் ———— நாட்கள் ————.
 (ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்காய கடைசித் திகதியன்று சரியான வயது :————.
 வருடம் ———— மாதம் ———— நாட்கள் ————.

4. சாதியம் :————.

5. விவாகஞ் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா ? : ————.

6. பின்வருவனவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சை :
 (1) சிங்களம் :————.
 (2) தமிழ் :————.
 (3) ஆங்கிலம் :————.
 (4) வேறு மொழிகள் :————.

7. பாடசாலையிலிருந்து விலகிய காலந்தொடக்கம் புரிந்த உத்தி யோகமும்/அல்லது பயின்ற பயிற்சி நெறிகளும் பற்றிய விபரங்கள் :————.

8. கல்வித் தகைமைகளும் உயர்தொழிற் தகைமைகளும்/அல் லது விசேட தகைமைகளும் :————.

9. நூலகப் பொறுப்பாளர் பதவியொன்றில் பெற்றுள்ள அனுப வம் ஏதேனும் இருப்பின் அவை பற்றிய விபரங்கள் : ————.

10. சட்ட நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் குற்றத்திற் காக உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙன மாயின் குற்றம் பற்றிய விபரங்களையும் பெற்றுள்ள தண் டனை பற்றிய விபரங்களையும் தருக :————.

11. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்துள்ள இருவரது பெயர் களும் பதவிப் பெயர்களும் :————.

இந்த விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். இதில் கொடுக்கப்பட்ட விப ரங்கள் பிழையானவையாகவோ அல்லது உண்மையற்றன வாகவோ தெரிவுக்கு முன்னர் கண்டு பிடிக்கப்பட்டால், விண் ணப்பித்தற்குத் தகுதியற்றவனாகக் கருதப்படுவேன் என்பதையும், தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் நட்ட ஈடின்றி வேலை நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி ————.

விண்ணப்பதாரர் பொதுச் சேவையிலுள்ளவராயின் திணைக் களத் தலைவரின் விதப்புரை.

————,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :————.

3-403—10.08.73 ந திகதிய வர்த்தமானி இல. 72.

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### காலிஸ்தானங்கள்

இவ்வமைப்பின் பொறியியல் பகுதியில் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பிரசைகளிடமிருந்து கோரப்படுகின்றன.

(1) மாதிரியுரு அமைப்பவர்—I ஆம் வகுப்பு

**தகைமைகள்**

(அ) **வயது.**—1973.08.25 ஆந் தேதியன்று 20 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவராகவிருக்க வேண்டும்.

(ஆ) **கல்வி.—VIII** ஆம் தரத்தில் சித்தியடைந்திருக்கவேண்டும்.

**தொழில் அனுபவம்.**—அங்கீகரித்த நிலையமொன்றில், மாதிரியுரு அமைத்தலில் 10 வருட அனுபவம். மாதிரிப் படங்களையும் வரைதல்களையும் வாசித்து விளங்கக்கூடிய திறமை. அத்துடன் மாதிரியுரு அமைத்தலில் நல்ல அறிவு.

**சம்பள அளவுத் திட்டம்.**—எல்லாம் உட்பட மாதாந்தம் ரூபா 280/—10 × 12—ரூபா 400/-

(2) மாதிரியுரு அமைப்பவர்—II ஆம் வகுப்பு

**தகைமைகள்**

(அ) **வயது.**—1973.08.25 ஆம் தேதியன்று 20 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவராகவிருக்கவேண்டும்.

(ஆ) **கல்வி.—VIII** ஆம் தரத்தில் சித்தியடைந்திருக்கவேண்டும்.

**தொழில் அனுபவம்.**—அங்கீகரித்த நிலையமொன்றில், மாதிரியுரு அமைத்தலில் 7 வருட அனுபவம். மாதிரிப் படங்களையும் வரைதல்களையும் வாசித்து விளங்கக்கூடிய திறமை. அத்துடன் மாதிரியுரு அமைத்தலில் நல்ல அறிவு.

**சம்பள அளவுத் திட்டம்.**—எல்லா உட்பட மாதாந்தம் ரூபா 220/- 5 × 4 ; 10 × 9—ரூபா 330/-

நேர்முகப் பரீட்சை, தொழில் பரீட்சை ஆகியவற்றிற்குப் பின் தெரிவு நடைபெறும். தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர்கள் தங்களது தகைமைகளுக்கும் அனுபவத்திற்குமேற்ப அவ்வந்தச் சம்பள விகித அளவுகளில் அமர்த்தப்படுவார்கள்.

ஆகக் குறைந்த தகைமையுடையவர்கள் கீழ்த்தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கேற்ப தங்கள் விண்ணப்பங்களைத் தயாரித்து 1973 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னதாக கொழும்பு 5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இ.போ.ச. ஆளணி முகாமையாளருக்கு அனுப்பிவைக்க வேண்டும். விண்ணப்பங்கள் உள்ளடக்கப்பட்ட உறைகளின் இடது பக்க மேல் மூலையில் "பீபி/எப்" கிளை எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

ஆளணி முகாமையாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
கொழும்பு 5.

### மாதிரிப் படிவம்

மாதிரியுரு அமைப்பாளர்

**பதவி—I/II ஆம் வகுப்பு**

1. விண்ணப்பித்த பதவியும் வகுப்பும் :————.
2. விண்ணப்பதாரரின் பெயர் முதலெழுத்துக்களுடன் :——
3. சொந்த முகவரி :————.
4. பிறந்த தேதி :————.
   (அ) 1973.08.25 ஆம் தேதியன்று வயது———— வருடம்———— மாதம்————நாள்
5. கல்வித் தகைமைகள் :————.
   (சித்தியடைந்த ஆகக்கூடிய தரத்தையும் மொழியையும் குறிப்பிடவும்—சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் என)
6. தொழில் அனுபவம் :————.
   (நிலையத்தின் பெயரையும், அனுபவத்தின் காலத்தையும் குறிப்பிடவேண்டும்) :————.
7. அரசிறை மாவட்டம் :————.
8. தேர்தற் தொகுதி :————.

இவ் விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் உறுதிப்படுத்துகிறேன். அத்துடன் இதன்கண் தரப்பட்டுள்ள விடயங்கள் பிழையானவையாகவோ, சரியற்றவையாகவோ தெரிவிற்கு முன் காணப்பட்டால் தகுதியற்றவரென நீக்கப்படுவதற்கும், தெரிவிற்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு இன்றி உத்தியோகத்திலிருந்து விலக்கப்படுவதற்கும் இடமுண்டு என்பதையும் நான் நன்கறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

தேதி 1973.

8–487—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72.

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### காலிஸ்தானங்கள்

சபையின் சேவையில் III ஆம் தர புள்ளிவிபர உத்தியோகத்தர் பதவிக்குக் கவனிக்கப்படுவதற்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **சம்பள அளவுத் திட்டம்.**—(எல்லாம் உட்பட) மாதாந்தம் ரூபா **1,100—50 × 12** ரூபா 1,700. ரூபா **1,350** க்கு முன்பு வினைத்திறமைகாண் தடையுண்டு.

2. **வயது.**—27 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவராக விருக்க வேண்டும்.

3. **தகைமைகள்.**—புள்ளிவிவரத்தில் அல்லது புள்ளிவிவரத்தைத் துணைப்பாடமாகக் கொண்ட பொருளியலில் 1 ஆம் அல்லது 2 ஆம் வகுப்புச் சிறப்புப் (ஹானர்ஸ்) பட்டம். அத்துடன் தனியார் நிலையத்தில் அல்லது அரசாங்க திணைக்களத்தில் அல்லது அரசாங்க ஆதரவிலுள்ள கூட்டுத்தாபனத்தில் பொருளியலராக அல்லது புள்ளிவிவர உத்தியோகத்தராக ஆகக் குறைந்தது 5 வருட அனுபவம் இருக்க வேண்டும்.

4. (அ) அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களைத் தத்தமது திணைக்களங்கள் மூலமாக அனுப்பிவைக்க வேண்டும். அவர்களை, தற்போது அவர்கள் கடமையாற்றும் திணைக்களத் தலைவர்கள் 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் நியதிகளிற்கு ஏற்பச் சபையில் வேலையாற்ற விடுவிப்பதற்கு உடன்பட ஆயத்தமாயிருந்தால் மட்டுமே அவர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படும்.

   (ஆ) விளம்பர நியதிகட்கேற்பக் கூட்டுத்தாபனங்களிலுள்ள தகைமையுடைய உத்தியோகத்தர்கள் நியமனத்திற்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவர்கள் தற்போது கடமையாற்றும் கூட்டுத்தாபனத் தலைவர் அல்லது பொது முகாமையாளர், அவர்களை விடுவிப்பதற்கு உடன்பட ஆயத்தமாயிருந்தால் மட்டுமே, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படும். கூட்டுத்தாபன மூலமாகவே விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.

5. **வேலை நிபந்தனைகள்.**—தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் முதலில் 3 வருடத் தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவார்கள். அவர்கள்—

   (1) நியமனத்திற்கு முன்பு வைத்தியப் பரிசோதனைக்கு ஆளாகி உடல் உறுதியுள்ளவர்களென சித்தியெய்த வேண்டும்.

   (2) ஏற்கனவே இயற்றப்பட்டுள்ளதும், இனிமேல் இயற்றப்படக்கூடியதுமான சபையின் விதிகளுக்கும், பிரமாணங்களுக்கும் இயைய நடத்தல் வேண்டும்.

   (3) தங்களுடைய தகுதிகாண் நிலைக் காலத்தில் அரசாங்க மொழிக் கொள்கையை நடைமுறையிற் கொண்டுவருவதற்குச் சபையால் விதிக்கப்பட்ட தராதர அளவிற்குச் சிங்கள மொழியிற் தேர்ச்சி பெற வேண்டும்.

   (4) தங்களது சம்பளத்தில் 6 சத விகிதத்தைச் சபையின் சேமலாப நிதிக்குச் செலுத்த வேண்டும். சபை 9 சத விகிதத்தைச் செலுத்தும்.

   (5) இலங்கையில் எப்பகுதியிலேனும், சபையின் எப் பிரிவிலேனும் சேவையாற்ற வேண்டும்.

6. கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள படிவத்திற்கேற்ப விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 1973 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக, கொழும்பு-5, நாரகேன்பிட்டி, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள ஆளணி முகாமையாளருக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

ஆளணி முகாமையாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
நாரகேன்பிட்டி,
கொழும்பு-5,
ஜூலை 23, 1973.

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பிக்கப்படும் பதவி :————
2. பரீட்சார்த்தியின் முழுப் பெயர் :————.
3. அஞ்சல் முகவரி :————.
4. பிறந்த திகதி :————.
   (பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று—மூலப் பிரதியல்ல—இணைக்கப்பட வேண்டும்).
5. 1973.08.25 ஆம் திகதியன்று சரியான வயது :—
   வருடங்கள் :————. மாதங்கள் :————. நாட்கள் : ————.
6. நீர் இலங்கைப் பிரசையானது வம்சாவழியாகவா அல்லது பதிவு மூலமாகவா ? :————.
7. விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா ? :————.
   (விவாகம் செய்தவராயின் விவாகம் செய்த திகதியும் பிள்ளைகளின் தொகையும் அவர்களின் வயதும்).
8. உயர்நிலைப் பாடசாலைக் கல்வி :————.
   (படித்த பாடசாலைகள், சித்திபெய்திய பரீட்சைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக).
9. உயர் கல்வி (படித்த நிலையங்கள், சித்திபெய்திய பரீட்சைகள், உயர் தொழில் தகைமைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக. சான்றிதழ்களின் பிரதிகள் (மூலப் பிரதிகள் அல்ல) இணைக்கப்பட வேண்டும்) :————.
10. தொழில் நுட்ப உயர்தொழில்த் தகைமைகள் :————.
   (படித்த நிலையங்கள், சித்திபெய்திய பரீட்சைகள், பெற்ற தகைமைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக. சான்றிதழ்களின் பிரதிகள் (மூலப் பிரதிகள் அல்ல) இணைக்கப்பட வேண்டும்).
11. தொழில் :————.
   (பாடசாலை விட்டு விலகிய பின் பார்த்த வேலைகளின் விபரம், அதாவது பதவிப் பெயர், வேலைகொள்வோரின் பெயர், நியமனத் திகதி, விலகிய திகதி, விலகுவதற்கான காரணங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுக).
12. அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் அல்லது வர்த்தக நிலையங்களில் நிறைவேற்றுப் பதவிகளில் உயர் தொழில் பயிற்சி அல்லது அனுபவம். (வகித்த பதவிகள், வேலையின் தன்மை, எல்லாம் உட்பட்ட சம்பளம் ஆகியவற்றைத் திகதிகளுடன் குறிப்பிடுக) :————.
13. விண்ணப்பிப்பதற்கு ஆதாரமான **விசேட உரிமைகள்** (இப் பதவிக்கு உங்கள் தகுதியை உயர்த்தக்கூடிய மேற்கூறிய எப் பதவியிலேனும் செய்த வேலையின் விவரங்களைச் சுருக்கமாகத் தருக) :————.
14. சிங்களத்தில் எய்தியுள்ள ஆகக்கூடிய தராதரம் :————.
15. இதற்கு முன்னர், இலங்கைப் போக்குவரத்துச் சபையில் ஏதாவது பதவிக்கு நீர் விண்ணப்பித்தீரா ? விண்ணப்பித்திருப்பின் முடிவுகள் யாவை ? :————.
16. வேறேதேனும் விபரங்கள் :————.
17. சட்ட நீதிமன்றத்தில் சிறிமினல் குற்றங்கள் எதற்கேனும் குற்றவாளியாகக் காணப்பட்டீரா ? :————.
   அங்ஙனமாயின் விவரங்கள் தருக :————.
18. விண்ணப்பதாரர் பற்றிய தகவல்கள் பெறக்கூடிய இருவரது பெயர்களும் முகவரிகளும் :—
   (1) ————.
   (2) ————.

இவ் விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையெனவும், இதன்கண் தரப்பட்டுள்ள விடயங்கள் பிழையானவையாகவோ, சரியற்றவையாகவோ தெரிவிற்கு முன் காணப்பட்டால் தகுதியற்றவரென நீக்கப்படுவதற்கும், தெரிவிற்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு இன்றி உத்தியோகத்திலிருந்து விலக்கப்படுவதற்கும் இடமுண்டு என்பதையும் நான் நன்கறிவேனெனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

8-463—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72.

---

## இலங்கை வான்படை

### ஆணைப்பெற்ற உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்கள்—விமானத் தளக் கட்டுமானக் கிளை (கட்டுவேலைச் சேவை)

இலங்கை வான்படைக் கட்டுமானக் கிளையில் (கட்டு வேலைச் சேவை) உத்தியோகத்தர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்களுக்கு இலங்கை வான்படையில் பணி ஆணைகள் வழங்கப்படும். தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் 12 ஆம் பந்தியின் (இ) உப பிரிவில் (i) இல் இருந்து (iii) வரையில் நிரல்படுத்தப்பட்ட கல்வித் தகைமைகளை வைத்திருப்பவர்களாயின் அவர்களுக்குப் பறத்தற் பொறுப்பு லெப்டினன் வரிசைப் பதவியில் பணி ஆணைகள் வழங்கப்படும். அவர்கள், 12 ஆம் பந்தியின் (இ) உப பிரிவில் (iv) இல் இருந்து (vi) வரையில் நிரல்படுத்தப்பட்ட கல்வித் தகைமைகளை வைத்திருப்பவர்களாயின் அவர்களுக்கு முன்னோடி உத்தியோகத்தர் வரிசைப் பதவியில் பணி ஆணைகள் வழங்கப்படும்.

3. வான்படை அமைந்துள்ளதும் அதனால் இயக்கப்படுவதும் உபயோகிக்கப்படுவதுமான விமானத்தளங்கள், கட்டடங்கள், வீதிகள், பிற தாபிப்புகள் ஆகியவற்றை அமைப்பதும் பேணுவதும் விமானத்தளக் கட்டுமானக் கிளை உத்தியோகத்தரின் கடமைகளாகும். (இவற்றுடன் எல்லா உத்தியோகத்தர்களுக்குரிய இயல்பான கடமைகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்).

4. தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் தேவைக்கேற்ப இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் பயிற்சி பெறும்படி வேண்டப்படலாம்.

5. **சம்பளமும் படிகளும்.**—1961 ஏப்ரல் 28 என்னும் தேதியிட்ட 12,395 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1961 ஆம் ஆண்டின், வான்படை சம்பளக் கோவையின் பிரகாரமும் காலத்துக்குக் காலம் ஏற்படக்கூடிய திருத்தங்களுக்கேற்பவும், சம்பளமும் படிகளும் வழங்கப்படும்.

(அ) பக்க முனைனுன் பதவித்தரம் வரையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடைத்தாகும் திரட்டிய சம்பளம் வருமாறு :—

**பயிலட் ஒவ்விசர்.**—ஆண்டொன்றுக்கு 7,140 ரூபா.

**பிளையிங் ஒவ்விசர்.**—ஆண்டொன்றுக்கு 7,500 ரூபா. அது ஒவ்வொன்றும் 180 ரூபா கொண்ட ஐந்து ஆண்டு ஏற்றங்களுடன் ஆண்டொன்றுக்கு 8,400 வரையில் உயரும்.

**பிளைட் லெப்டினன்.**—ஆண்டொன்றுக்கு 9,240 ரூபா. அது ஒவ்வொன்றும் 180 ரூபா கொண்ட எட்டு ஆண்டு ஏற்றங்களுடன் ஆண்டொன்றுக்கு 10,680 ரூபா வரையில் உயரும்.

**ஸ்குவாட்றன் லீடர்.**—ஆண்டொன்றுக்கு 11,400 ரூபா. அது ஒவ்வொன்றும் 240 ரூபா கொண்டு எட்டு ஆண்டு ஏற்றங்களுடன் ஆண்டொன்றுக்கு 13,320 ரூபா வரையில் உயரும்.

**விங் கொம்மாண்டர்.**—ஆண்டொன்றுக்கு 15,000 ரூபா. அது ஒவ்வொன்றும் 360 ரூபா கொண்ட ஏழு ஆண்டு ஏற்றங்களுடன் ஆண்டொன்றுக்கு 17,520 ரூபா வரையில் உயரும்.

(ஆ) **சீருடைக்கான படி.**—பணி ஆணை வழங்கப்பட்டதன் பேரில் அயன மண்டல உடைகளுக்கென 1,000 ரூபா கொண்ட படி ஒன்று வழங்கப்படும். வெளி நாடுகளில், சேவையாற்றுதற்கென அல்லது பயிற்சி பெறுவதற்கென அனுப்பப்படுமிடத்து மேலும் 1,300 ரூபா வழங்கப்படும். இரண்டு வருட சேவை பூர்த்தியான பின்பு சீருடைகளைப் பேணுவதற்கென மாதமொன்றுக்கு 25 ரூபா படியாகக் கொடுக்கப்படும்.

(இ) பிற **படிகள்.**—அரசாங்க விவாகப்படி வீதத்தில் விவாகப் படியும் வழங்கப்படும்.

6. பதவிகள் ஓய்வூதியமற்றவை. தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள், 1972 சனவரி 10 தேதியிட்ட 3 ஆம் இலக்க ஓய்வூதியத் திணைக்களச் சுற்று நிருபத்தில் விதிக்கப்பட்டவாறு அரசாங்க சேவை ஏற்பாட்டு நிதியத்துக்குப் பணம் செலுத்துமாறு கேட்கப்படுவர்.

நிரந்தரமானதும் ஓய்வூதியமுள்ளதுமான பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அவர், காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான ஓய்வூதிய நிகழ்ச்சிக் குறிப்புக்களில் விதிக்கப்பட்ட நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் கீழ் தனது ஓய்வூதிய உரிமைகளைத் தொடர்ந்தும் அனுபவிப்பார்.

7. **சேவை நிபந்தனைகள்.**—இலங்கை வான்படையைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவரின் சேவை நிபந்தனைகள் 1951 ஏப்ரல் 27 ஆம் தேதியில் 10,240 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளி

யிடப்பட்ட இலங்கை வான்படை (நிலையான அல்லது நிலையான ஒதுக்கப்படை) நியதிகளுக்கு அமையவும் காலத்துக்குக் காலம் செய்யப்படும் திருத்தங்களுக்கேற்பவும் இருக்கும்.

8. விவாகமாகாத உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்களுக்கான உண்டிச்சாலையில் வதியும்படி கேட்கப்படுவர். அவர்களுக்கு உணவு, சொக்கன் சேவை ஆதியன வழங்கப்படும்.

9. விவாகமான உத்தியோகத்தருக்கு மணமானோர் குடிமனை (இருப்பின்) வழங்கப்படும்; அத்துடன், அவருக்கான சொக்கன் சேவைக்குப் பதிலாக ஒரு படியும் கொடுக்கப்படும்.

10. வான்படை உத்தியோகத்தர்கள் எந்த நேரத்திலாவது, உலகத்தின் எந்தவொரு பகுதிக்காவது கடமையின் பொருட்டு அல்லது பயிற்சியின் பொருட்டு அனுப்பப்படுவதற்கு உள்ளாவார்கள்.

11. தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை, குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் செய்சட்டத்தின் ஏற்பாடுகளை, நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்துவதன் பொருட்டு ஏற்கனவே இயற்றப்பட்ட விதிகளுக்கு அல்லது இனிமேல் இயற்றப்படக்கூடிய விதிகளுக்கு அமைந்தொழுகும்படி வேண்டப்படுவர்.

12. **அடிப்படைத் தேவைகள்.**—விண்ணப்பகாரர் பின்வரும் தேவைகளைப் பெற்றிருத்தல் வேண்டும் :—

(அ) **தேசிய இனம்.**—வேட்பாளர்கள்,

(i) பரம்பரையாக, அல்லது,

(ii) பதிவின் மூலம்,

இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.

(ஆ) **வயது.**—வேட்பாளர்கள் 1973 செப்டெம்பர் 1 இல் 33 வயதுக்கு மேற்பட்டவராய் இருக்கக்கூடாது.

(இ) **கல்வி/உயர்தொழிற் கல்வி.**—வேட்பாளர்கள் பின்வருவற்றுள் ஒன்றினை வைத்திருப்பதற்குத் திருப்தியான சான்று அளித்தல் வேண்டும்.

(i) ஏ.எம்.ஐ.சி.ஈ., ஏ.எம்.ஐ.ஈ.ஈ., அல்லது ஏ.எம்.ஐ. பொறிமுறை எந்திரவியல்.

(ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றின் எந்திரவியற் பட்டம்.

(iii) ஏ.எம்.ஐ.சி.ஈ., ஏ.எம்.ஐ.ஈ.ஈ., அல்லது ஏ.எம்.ஐ: பொறிமுறை எந்திரவியல், பரீட்சைகளின் I ஆம் II ஆம் பகுதிகளுக்கான (அல்லது 'அ' 'ஆ' பிரிவுகளுக்கான) பயிற்சி நெறியொன்றினை அனுகூலத்துடன் பூர்த்தி செய்து இருப்பதுடன் சிவில், மின்னியல் அல்லது பொறியியல் எந்திரிகளின் நிறுவனத்தினால் அந்நிறுவனப் பரீட்சையின் III ஆம் பகுதிக்கு (அல்லது 'இ' பிரிவுக்கு) த் தோன்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

பின்வரும் தகைமைகளை உடைய வேட்பாளர்கள் பிற, விசேட தகைமைகளை அல்லது அனுபவத்தைப் பெற்றிருப்பின், பரிசிலனை செய்யப்படுபவர்.

(iv) இலங்கைத் தொழினுட்பக் கல்லூரியிலிருந்து சிவில், மின், அல்லது பொறி எந்திரவியலில் டிப்புளோமாப் பட்டம் பெற்றிருப்பதுடன் அரசாங்க அல்லது அங்கீகரிக்கப்பட்ட எந்திரவியல் நிறுவனத்தில் மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவமும் பெற்று இருத்தல் வேண்டும். அல்லது,

(v) (சிவில்) அல்லது (பொறியியல்) அல்லது (மின்னியலில்) கனிஷ்ட தொழினுட்ப உத்தியோகத்தர் சான்றிதழைப் பெற்றிருப்பதுடன், அப்படிப் பெற்ற பின்பு, அரசாங்கத் திணைக்களத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட எந்திரவியற் தாபனத்தில் பாரிய கட்டட அமைப்பு வேலைகளில் 5 வருடங்களுக்குக் குறையாத செயல் அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

(vi) உயர்தொழில் எந்திரவியல் நிறுவனங்களின் இணைந்த முதலாம் பகுதியில் (பிரிவு 'அ' வில்) சித்தி எய்திய பின்பு ஓர் அரசாங்கத் திணைக்களத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட எந்திரவியல் தாபனமொன்றில் பாரிய எந்திரவியல் வேலையில் ஐந்து வருடங்களுக்குக் குறையாத செயல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு.—மேலே குறிப்பிடப்பட்ட தொழினுட்ப தகைமைகளுடன் அரசாங்கத் திணைக்களத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட எந்திரவியல் தாபனத்தில் செயல் அனுபவமும் பெற்றுள்ளவர்களுக்குச் சலுகை வழங்கப்படும். ஆயின், அது பொதுப் பொருத்தமாம் தன்மைக்கு அமைவானதாகவே இருக்கும்.

(ஈ) **மருத்துவத் தரம்.**—வேட்பாளர்கள் வான்படை மருத்துவ தரங்களுக்கு இசைவாய் இருத்தல் வேண்டும் (ஆகக் குறைந்த உயரம் 5 அடி 5 அங்., மார்பு 32 அங்., எடை 105 இரு.)

13. **விண்ணப்பகாரர்களுக்கான அறிவுறுத்துரைகள்.**—இந்த அறிவித்தலுக்குப் பின்னிணைப்பு 'அ' வாகவுள்ள படிவத்தில் விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும். அச்சிடப்பட்ட படிவப் பிரதிகள் இல்லாமையால் விண்ணப்பகாரர்கள் தேவையான படிவங்களைத் தாமே தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும். விண்ணப்பங்கள், விதித்த படிவத்துக்கு அமைவாக இல்லாவிடின் நிராகரிக்கப்படும்.

14. விண்ணப்பங்கள் வான்படைத் தளபதி, அ. அ. பெட்டி 594, கொழும்பு, என முகவரியிடப்பட்டு 1973, செப்டெம்பர் 3 ஆம் திகதிக்கு முன் கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் தபால் உறைகளின் இடதுபக்கத்து மேல் மூலையில் " விமானத்தளக் கட்டுமானக்கிளை உத்தியோகத்தர் விண்ணப்பம் " என எழுதப்படவேண்டும்.

15. விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளும் அனுப்பப்படல் வேண்டும் :—

(அ) விண்ணப்பகாரரின் பிறப்புச் சான்றிதழ்.

(ஆ) அதியுயர்ந்த கல்வி/உயர் தொழில் சான்றிதழ்.

(இ) விண்ணப்பகாரருடன் பழக்கமுள்ள குறைந்தது இரண்டு பொறுப்பு வாய்ந்த நபர்களிடமிருந்து பெற்ற நற்சான்றிதழ்கள்.

(ஈ) விண்ணப்பத்தில் ஏதாவது கோரிக்கையிடப்பட்டிருந்தால் அதற்கு ஆதாரமான சான்றிதழ்கள்.

16. அரசாங்க உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் அவர்களது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்பட்டு இருத்தல் வேண்டும். அத்துடன் அதில், விண்ணப்பகாரர் தெரிவு செய்யப்பட்டால் அவர் விடுவிக்கப்படுவாரா அல்லவரா என்பதும் குறிப்பிடப்பட்டு இருத்தல் வேண்டும்.

17. **தெரிவுகள், நேர்முகப்பரீட்சைகள் முதலியன.**—பொருத்தமானவர் எனக் கணிக்கப்படும் வேட்பாளர் தனது சொந்தச் செலவில் தெரிவு சபைகளின் முன்பு தோன்றும்படி கேட்கப்படுவார்.

18. முதல் நிலைத் தெரிவுச் சபையினால் பொருத்தமானவர்கள் எனக் கருதப்படும் வேட்பாளர்கள் வான்படையின் மருத்துவ சோதனைக்கு உட்படுத்தப்படுவர். அத்துடன், அவர்கள், இறுதித் தெரிவுச் சபைக்கு முன் தோன்றுவதன் முன்பு உத்தியோகத்தர் பண்புத் தரத் தேர்வுக்கு உள்ளாகும்படியும் வேண்டப்படுவர்.

பி. எச். மென்டிஸ்,
வான்படைத் தளகர்த்தர்,
வான்படை முனைஞன்.

தலைமையகம்,
இலங்கை வான்படை,
த. பெ. இல. 594,
கொழும்பு, 1973, ஆகஸ்ட் 10.

பின்னிணைப்பு " அ "

**இலங்கை வான்படையின் விமானத்தளக் கட்டுமானக் கிளையில் (கட்டுவேலைச் சேவைகள்) பணி ஆணைப் பதவிகளில் அமர்தற்கான விண்ணப்பம்**

1. குடும்பப் பெயர் :————.

பிற பெயர்கள் :————.
(பெரிய எழுத்தில்)

2. தற்போதைய முகவரி :————.

i. தொலைபேசி எண் :————.

ii. மிக கிட்டிய புகையிரத நிலையம் :————.

iii. மிக கிட்டிய பொலிஸ் நிலையம் :————.

iv. தந்தி அலுவலகம் :————.

3. நிரந்தர வதிவிடம் :————.

இங்கு எவ்வளவு காலம் நீர் வாழ்ந்துள்ளீர் :————

4. விவாகமானவரா அல்லரா ? :————.

5. பெற்றோர் பற்றிய விவரங்கள் :—

(அ) தந்தையின் பெயர் :————.
பிறப்பிடம் :————.
பிறக்கும்போது குடியுரிமை :————.

(ஆ) தாயின் பெயர் :————.
பிறப்பிடம் :————
பிறக்கும்போது குடியுரிமை :————.

6. பள்ளிக்கூட, பல்கலைக்கழக வாழ்க்கை பற்றிய விவரங்கள் :
(அ) பள்ளிக்கூடம் முதலியவற்றின் பெயர்கள் :————.
(ஆ) சேர்ந்த தேதி :————.
(இ) விலகிய தேதி :————.

7. பள்ளிக்கூடம் விட்டு விலகிய பின்பு வகித்த பதவிகள் பற்றிய விவரங்கள் :—
(இது பூரணமானதாய் இருத்தல் வேண்டும்)
(அ) பணிகொள்வோரின் பெயர் :————.
(ஆ) பணியின் தன்மை :————.
(இ) பணிபுரிந்த காலம் :————.

8. படைதாங்கு சேவைகளிலுள்ள பதவி வெற்றிடம் ஏதாவதொன்றுக்கு நீர் முன்பு எப்போதாவது நேர்முகப் பரீட்சைக்குத் தோன்றியுள்ளீரா? இதற்கான உமது பதில் "ஆம்" என்பதாக விருந்தால் விண்ணப்பித்த பதவிகள், தேதிகள் பற்றிய விவரங்களைத் தருக :————

9. சிவில் அல்லது இராணுவ மன்றினால் நீர் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா? உமது பதில் "ஆம்" ஆக இருந்தால் விவரம் தருக :————.

10. இவ்வறிவித்தலின் 12 ஆம் பந்தியில் வேண்டப்பட்டவாறான தகைமைகள் :—
பிறந்த தேதி :————.
வயது :——— வருடம், ——— மாதம், ——— நாள்.

(1973 செப்டம்பர் 1 அளவில்)

பிறந்த இடம் :————.
குடியுரிமை :————.
பிறந்த போது :————.
இப்போது :————.

(அ) தகுதி :————.

(ஆ) நீர் பெற்ற கல்வித் தகைமைகள் :————.
(அதாவது 12 ஆம் பந்தியின் கீழ் நீர் தகைமைபெறும் துணை வாசகம்)

(இ) உயரம் :
அடி :————.
அங். :————.

(ஈ) மார்பு :—
அங் . :————.

(உ) எடை :
இரு :————.

11. மேலதிகத் தகைமைகள் (பின்வரும் கூடுகளில் தரப்படும் கோரிக்கைகளை நிரூபிக்கக்கூடிய நிலையில் விண்ணப்பகாரர் இருத்தல் வேண்டும்) :————.

12. விளையாட்டுத் துறையில் சாதித்த சாதனைகள் :————.
(விளையாட்டுக் குழுமங்களின் விவரங்கள் தருக. அத்துடன், போட்டிகளிற் பங்கு பற்றிய தேதிகளையும் சாதித்த சாதனைத் தரங்களையும் குறிப்பிடுக)

13. பாடசாலையில் அல்லது பல்கலைக்கழகத்தில் சாதித்த பிற சாதனைகள் :————.

14. நிலையான அல்லது சுயேச்சையான படைதாங்கு சேவையில் அல்லது சாரணர் அமைப்பினில் சேவையாற்றிய விவரங்கள் :————.

15. விசேட தகைமைகள் எவையேனுமிருப்பின் அவற்றின் விவரங்கள் :————.

16. விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்ட பத்திரங்கள் (பிரதிகள் மட்டுமே அனுப்பப்படல் வேண்டும்) :————.

17. சான்றிதழ்கள் எவர்களிடமிருந்து பெறப்பட்டனவோ அவர்களின் பெயர்கள் :————.

18. இவ்விண்ணப்பத்துடன் அனுப்பப்பட்ட பிற பத்திரங்கள் .
————.

————,
விண்ணப்பகாரரின் ஒப்பம்.

திகதி : 1973————.

8-481—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72.

---

மாத்தறை மாவட்டம், மொறவக்கோறளை மேற்கு, உடுவக மதுகொபே தெனியாயப் பிரிவில் திடீர் மரணப் பரிசோதகர் பதவி

மாத்தறை மாவட்டம், மொறவக்கோறளை மேற்கு உடுவக மதுகொபே தெனியாயப் பிரிவில், திடீர் மரண பரிசோதகர் பதவிக்காக கீழ்க்குறிப்பிடும் தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அவர்கள் விஹாரஹேன, தெனியாய சக சிரிவல்தொள கிராம சேவகர் பிரிவுகள், கடேயாய, கந்தில்பான கிராமங்கள் சக கம்டன் ஹில் தோட்டம், விலீகுறூப்பின் ஒரு பாகம், பெவற்மி தோட்டம், நாத்தகல தோட்டம், பெலிகல் லென தோட்டம் சக கலஹன்கந்த தோட்டம் ஆகிய ஏதாவதொரு பிரிவில் நிரந்தர வசிப்பாளராக இருத்தல் வேண்டும். இதற்கான விண்ணப்பங்களை இக்காரியாலயத்திலிருந்தோ அல்லது கொடபொள டி. ஆர். ஓ. காரியாலயத்திலிருந்து (மொறவக் கோறளை மேற்கு) பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களை உரிய முறையில் நிரப்பி, அத்தாட்சிப் பத்திரிகைகளின் பிரதிகளுடன் பதிவுத்தபால் மூலம் 1973-8-30 ந் திகதிக்கு முன்னர் கீழ் குறிப்பிடும் விலாசத்துக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்தமை அறிவிக்கப்படமாட்டா.

1. விலாசம்.—அரசாங்க அதிபர், கச்சேரி, மாத்தறை.

2. தகைமை—(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதிக்கு 30 வயதுக்குக் குறையாமலும் 60 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) நன்நடத்தை உடையவராயும் ஆரோக்கியம் பெற்றவராயும் இருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரி மேற்குறிப்பிட்ட தொகுதியில் நிரந்தர வசிப்பாளராக இருத்தல் வேண்டும்.

(ஈ) (i) 1925 முதல் 1944 வருடக் காலத்துக்கிடையில் பாடசாலையை விட்டுப்போகும் தராதரப் பத்திரப் பரீட்சை அல்லது சிங்கள மொழியுடன் கல்வித் திணைக்களத்தில் கனிஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையிலோ, அல்லது

(ii) சிங்கள மொழியுடன் சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சையிலோ அல்லது அதற்கு உயர்வான பரீட்சையொன்றிலோ சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

(உ) அரசாங்க, கூட்டுத்தாபன அல்லது உள்ளூராட்சி மன்றங்களிலோ ஊழியராக இருத்தல் கூடாது.

(ஊ) உள்ளூராட்சி மன்றங்களில் அபேட்சகர்களாக இல்லாமல் இருக்க வேண்டும்.

3. விண்ணப்பதாரிகளால் தங்கள் விண்ணப்பங்களுடன் கீழ் குறிப்பிடும் தராதரப்பத்திரங்களின் பிரதிகள் அனுப்பப்படல் வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப்பத்திரம்.
(ஆ) பெற்றுள்ள கல்வித்தகைமை சம்பந்தமான அத்தாட்சிப் பத்திரங்கள்.
(இ) அண்மைக்காலத்தில் பெற்ற நற்சாட்சிப்பத்திரங்கள் இரண்டு (இதில் ஒன்று கிராம சேவகரிடம் பெற்றதாக இருத்தல் வேண்டும்.)
(ஈ) தொகுதியில் நிரந்தர வசிப்புச் சம்பந்தமாக கிராம சேவகரின் உறுதி (இப்பிரதேச டி. ஆர். ஓ. மூலம் அனுப்ப வேண்டும்.)

4. இதற்கு மேலதிகமாக தங்கள் விண்ணப்பங்களுடன், அவ்விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிட்ட விடயங்கள் உண்மையென்றும், கடன்கள் ஏதும் இல்லையென்றும், சத்தியக் கடதாசியொன்று இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

5. எல்லா விண்ணப்பக்காரர்களும் விண்ணப்பங்களை சொந்தக் கையெழுத்தினால் நிரப்பல் வேண்டும்.

6. விண்ணப்பக்காரர்கள் நேரமுகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டால், அதற்காக பிரயாணச் செலவுகளோ வேறுகொடுப்பனங்களோ வழங்கப்படமாட்டாது.

டப்ளிவ். ஏ. எல். விஜயபால,
மாத்தறை அரசாங்க அதிபர்.

மாத்தறைக் கச்சேரி,
1973.7.25

8-417/1—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72.

## மாத்தறை மாவட்டம், வெலிகம் கோறளை வடக்கு, வில்பிட பிரிவில் திடீர் மரண பரிசோதகர் பதவி

மாத்தறை மாவட்டம், வெலிகம் கோறளை வடக்கு என்னும் பிரிவில், திடீர் மரண பரிசோதகர் பதவிக்காக திப்பொடுவாவ, இஹள-அதுரலிய, பஹள-அதுரலிய, வில்பிட மேற்கு, வில்பிட கிழக்கு (ஒரு பாகம்) ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் நிரந்தர வசிப்பாளராக இருப்பவர்களிடமிருந்து கீழே தரப்பட்ட தகைமை உடையவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இதற்கான விண்ணப்பங்களை இக்காரியாலயத்திலிருந்தோ அல்லது வெலிகம் கோறளை வடக்கு (அகுறஸ்ஸ) உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களை உரிய முறையில் நிரப்பி, அத்தாட்சிப் பத்திரங்களின் பிரதிகளுடன் பதிவுத்தபால் மூலம் 1973.8.30 ந் திகதிக்கு முன்னர் கீழ் குறிப்பிடும் விலாசத்துக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்தமை அறிவிக்கப்படமாட்டாது.

1. விலாசம் :—அரசாங்க அதிபர், கச்சேரி, மாத்தறை.

2. தகைமை.—(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதிக்கு 30 வயதுக்குக் குறையாமலும் 60 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) நன்நடத்தை உடையவராயும் ஆரோக்கியம் பெற்றவராயும் இருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரி மேற்குறிப்பிட்ட தொகுதியில் நிரந்தர வசிப்பாளராக இருத்தல் வேண்டும்.

(ஈ) (1) 1925 முதல் 1944 ம் வருடக்காலத்துக்கிடையில் பாடசாலையை விட்டுப்போகும் தராதரப்பத்திர பரீட்சை அல்லது சிங்கள மொழியுடன் கல்வித் திணைக்களத்தின் கனிஷ்ட தராதரப்பத்திர பரீட்சையிலோ அல்லது

(2) சிங்கள மொழியுடன் சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திர பரீட்சையிலோ அல்லது அதற்கு உயர்வான பரீட்சையொன்றிலோ சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(உ) அரசாங்க, கூட்டுத்தாபன அல்லது உள்ளூராட்சி மன்றங்களிலோ ஊழியராக இருத்தல் கூடாது.

(ஊ) உள்ளூராட்சி மன்றங்களில் அபேட்சகர்களாக இல்லாமல் இருக்கவேண்டும்.

3. விண்ணப்பதாரிகளால் தங்கள் விண்ணப்பங்களுடன் கீழ் குறிப்பிடும் தராதரப்பத்திரங்களின் பிரதிகள் அனுப்பப்படல் வேண்டும் :—

(அ) பிறப்புச்சாட்சிப் பத்திரம்.

(ஆ) பெற்றுள்ள கல்வித்தகைமை சம்பந்தமான அத்தாட்சிப் பத்திரங்கள்.

(இ) அண்மைக்காலத்தில் பெற்ற நற்சாட்சிப் பத்திரங்கள் இரண்டு (இதில் ஒன்று கிராமசேவகரிடம் பெற்றதாக இருத்தல் வேண்டும்.)

(ஈ) தொகுதியில் நிரந்தர வசிப்புச்சம்பந்தமாக கிராமசேவகரின் உறுதி (இப்பிரதேச உதவி அரசாங்க அதிபர் மூலம் அனுப்பவேண்டும்.)

4. இதற்கு மேலதிகமாக தங்கள் விண்ணப்பங்களுடன் அவ் விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிட்ட விடயங்கள் உண்மையென்றும், கடன்கள் ஏதும் இல்லையென்றும், சத்தியக்கடதாசியொன்று இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

5. எல்லா விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்களை சொந்தக் கையெழுத்தினால் நிரப்பல் வேண்டும்.

6. விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டால், அதற்காக பிரயாணச் செலவுகளோ வேறு கொடுப்பனவுகளோ வழங்கப்படமாட்டாது.

டப்ளிவ். ஏ. எல். விஜயபால,
மாத்தறை அரசாங்க அதிபர்.

மாத்தறைக் கச்சேரி,
1973-7-25.

8-417/2—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72.

---

## தேசிய சேமிப்பு வங்கி

### வெற்றிடங்கள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள, தேசிய சேமிப்பு வங்கிப் பதவிகளுக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :—

**ஆராய்ச்சி உதவியாளர் தரம் (IV)**

**வேண்டப்படும் தகைமைகள்.**—அங்கிகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தின் பட்டம். இதில், புள்ளிவிபரம் ஒரு பாடமாகவும் இருத்தல் வேண்டும். நல்ல, ஆங்கில அறிவை உடைய விண்ணப்பதாரர்கள் மற்றையோரைவிட விரும்பப்படுவர்.

**வயது.**—விண்ணப்பங்கள் முடிவடையும் தேதியன்று 20 வயதுக்கு மேற்பட்டதாயும் 35 வயதுக்குக் கீழ்ப்பட்டதாயும் இருத்தல் வேண்டும்.

**சம்பள விதம்.**—மாதமொன்றுக்கு ரூ. 305—ரூ. 675 / 8 × 15 — 10 × 25

அடிப்படைச் சம்பளமும் வங்கி விதங்களில் படிகளும். 575 ரூபாவுக்கு மேல் போதற்குத் திறமைகாண் தடையொன்று செயற்படும்.

**நியமன நிபந்தனைகள்.**—(i) பதவிகள் நிரந்தரமானவையும் ஓய்வூதியம் அற்றவையுமாகும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர், மொத்தச் சம்பளத்தின் 6 சத வீதத்தை வங்கிச் சகாய நிதியத்திற்குச் செலுத்தும்படி தேவைப்படுத்தப்படுவார். வங்கி செலுத்தும் தொகை 9 சத வீதமாகும்.

(ii) நியமனங்களானவை, மூன்றாண்டுத் தகுதிகாண் காலத்திற்கு அமைந்தனவாக இருக்கும். அரச அல்லது கூட்டுத்தாபனப் பகுதிகளில் கணிசமான அளவு காலச் சேவையையுடைய எவரேனும் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால், அத்தகைய விண்ணப்பதாரரின் நியமனமானது, வங்கிப் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான குறைந்த ஒரு தகுதி காண் காலத்தின் மீது செய்யப்படலாம்.

(iii) விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம்—

(அ) நல்லொழுக்கமானவரெனவும் உடல் தகுதியுடையவரெனவும்,

(ஆ) வேண்டப்படும் கல்வித் தகைமைகள் உடையவரெனவும், திருத்திகரமான சான்று தருதல் வேண்டும்.

(iv) விண்ணப்பங்களானவை, விதிக்கப்பட்டுள்ளதான அச்சிட்ட படிவங்களில் செய்யப்படுதல் வேண்டும். இப்படிவங்கள் சொந்த முகவரியிடப்பட்டதும், முத்திரை ஒட்டப்பட்டதுமான, 8" × 4" க்குக் குறையாத கடித உறையை அனுப்பி வங்கியின் ஆளணி உத்தியோகத்தரிடமிருந்து பெறப்படுதல் வேண்டும்.

(v) ஒரு விண்ணப்பப் படிவம் அல்லது அதையொட்டிய ஒரு கடிதம் தபாற் சேவையில் இழக்கப்பட்டு விட்டது அல்லது தாமதிக்கப்பட்டுவிட்டது என்ற குற்றச்சார்த்து எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(vi) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள்—

(அ) இலங்கையின் பகுதி எதிலும் சேவைபுரிதற்கு அவர்களது உடலின் தகுதியொட்டி வைத்தியப் பரிசோதனை ஒன்றைச் செய்விக்குமாறும்,

(ஆ) 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரச கரும மொழிச் சட்டத்தினதும் அரசாங்க மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்குத் தற்போதுள்ள அல்லது எதிர்காலத்தில் பிறக்கப்படக் கூடிய எவையேனும் சட்டங்களினதும் விதிகளினதும் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுமாறும்,

(இ) வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையிலும் முறையிலும் பிணைப் பணம் தருமாறும்,

(ஈ) இலங்கைக் குடியரசிற்கு விசுவாசமாக இருப்பர் என்ற சத்தியம் ஒன்றையும், இரகசியச் சத்தியம் ஒன்றையும் செய்யுமாறும்,

தேவைப்படுத்தப்படுவார்கள்.

(vii) உரிய முறையில் நிறைவுபடுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களானவை, ஆளணி உத்தியோகத்தர், தேசிய சேமிப்பு வங்கி, 'சேமிப்பகம்', கொழும்பு 3 என்ற முகவரிக்கு, 1973 ஓகத்து 31 ஆம் தேதிக்குப் பிந்தாமல் ஆளணி உத்தியோகத்தருக்குக் கிடைக்கத்தக்கதாகப் பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
தேசிய சேமிப்பு வங்கி.

கொழும்பு 3,
1973.07.31.

8-509—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72.

**நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபை**

காதிகளின் பதவிகள்

1965 ஆம் ஆண்டின் 1 ஆம், 1969 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் செய்சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான (115 ஆம் அத்தியாயமான) முஸ்லீம் விவாக, விவாக நீக்கச் சட்டத்தின் கீழ் பின் வரும் காதிகளின் பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்கென நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபையினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது :—

(i) நீர்கொழும்பு நீதிபரிபாலனப் பிரிவு.

(ii) பதுளை நிர்வாக மாவட்டம்.

2. விண்ணப்பதாரிகள் ஆண் முஸ்லீம்களாகவும், இலங்கைப் பிரசைகளாகவும், முப்பத்தைந்து வயதிற்குட்படாதவர்களாகவும், நல்ல ஒழுக்கமும் நல்ல நிலையிலுமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

3. அமைச்சரவையினால் தெரியப்படுவர், நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்படும் ஒரு காலவெல்லைக்கு நியமிக்கப்படுவர்.

4. ஒரு காதி எப்பிரதேசத்துக்கென நியமிக்கப்படுகிறாரோ அவர் அப்பிரதேசத்திலேயே வசிக்கக் கடப்பாடுடையர்.

5. விண்ணப்பங்கள் என்னிடமிருந்து பெறக்கூடிய விசேட படிவங்களில் செய்யப்படுதல் வேண்டும். அவை 1973 செப்ரெம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னதாக இந்த அலுவலகத்தைச் சேர்தல் வேண்டும்.

லயனல் சமரதுங்க,
செயலாளர்,
நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபை.

நீதிச்சேவைகள் ஆலோசனை, ஒழுக்காற்றுச் சபைகள்
அலுவலகம்,
த. பெ. 573,
சி/52, கெப்பிட்டிப்போல வீதி,
கொழும்பு 5,
30 ஜூலை, 1973.

8-436—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72.

---

இல. வெ.மு/4/158.

**கல்வி அமைச்சு**

ஹொங்கொங்கில் 1974 ஆம் ஆண்டு செல்லுபடியான பொது நலவரசுப் புலமைப் பரிசில்கள்

பொது நலவரசுப் புலமைப் பரிசில், இணையுரிமைப் பரிசுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுபவையும் ஹொங்கொங் பல்கலைக் கழகத்தில் 1974 ஆம் கழகவாண்டின் ஆரம்பத்திலிருந்து செல்லுபடியானவையுமான புலமைப் பரிசில்களை அளித்தற்பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பின்வரும் துறைகளில் எதிலேனும் பட்டப்பின் படிப்பை அல்லது ஆராய்ச்சி வேலையை மேற்கொள்தற்பொருட்டே இப்புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன :—

1. கல்வி
2. சீனமொழி
3. உயிரிரசாயனவியல்
4. தாவரவியல்
5. விரசாயனவியல்
6. கணிதம்
7. பௌதீகவியல்
8. விலங்கியல்
9. குடிசார் எந்திரவியல்
10. மின்னெந்திரவியல்
11. பொறிமுறை எந்திரவியல்

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்த பின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு.—1. புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16-5-60 ஆம் திகதிய 514 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்துக்கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச் சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு.—2. சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ஆம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

குறிப்பு.—3. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

2. கால எல்லை.—இப்புலமைப் பரிசில்கள் சாதாரணமாக இரண்டு வருடகால அளவினதாகும்.

எனினும், துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டு ஹொங்கொங் அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. தகவுத்திறன் : அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

(i) ஸ்ரீ லங்கா பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 1974-10-01 அன்று 35 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும்.

(iii) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்டதும் விரும்பும் துறையிலான பட்டப்பின் படிப்புக்குப் பொருத்தமுடையதுமான பொதுப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். (பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்த்திருப்போரின் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டா).

(iv) ஆங்கிலத்தில் சிறந்த தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு—1. அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 1.10.74 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

குறிப்பு—2. தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையவராகார். படிவத்தின் 15 (ஈ) ஆம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. அளிப்பு நிபந்தனைகள் : இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும் :—

(அ) போய் வருவதற்கான பயணச் செலவு (சாதாரண மிகவும் கிட்டிய ஆகாய விமானச் சிக்கன வகுப்பு).

(ஆ) பல்கலைக் கழகக் கட்டணம்.

(இ) மாதாந்தம் HK $ 1200 தாபரிப்புச் சகாயப்படி.

(ஈ) புத்தகங்களுக்கும் உபகரணங்களுக்குமாக வருடாந்தம் HK$ 400 சகாயப்படி அல்லது ஹொங்கொங்குக்கு வெளியே செலவு செய்யப்படின் £ 25 தேளிங்கு.

(உ) மேலதிக பிரயாணச் சகாயப்படி—வருடாந்தம் HK$ 400

(ஊ) உடைகளுக்கான சகாயப்படி (அவசியமாயின்) HK$ 640 அல்லது ஹொங்கொங்குக்கு வெளியே செலவு செய்யப்படின் £ 40 தேளிங்கு.

(எ) மருத்துவ வசதிகள்—பல்கலைக் கழக சாதாரண சுகாதார சேவைகளும், அரசாங்க வைத்தியசாலைகளில் இலவச மருத்துவ சிகிச்சையும், வைத்தியசாலைகளிலான தாபரிப்புக் கட்டணம், பற்சிகிச்சை, கண்சிகிச்சை யாதேனும் செவிப்புல துணைச் சாதனங்கள் அல்லது கருவிகளுக்கான செலவு இவற்றில் அடங்கவில்லை.

(ஏ) விண்ணப்பிக்கும் நேரத்தில் விவாகஞ் செய்திருப்பின், விவாகஞ் செய்துள்ள மாணவருக்கு (அவரே இடவசதியை ஒழுங்கு செய்ய வேண்டுமென்பதற்கமைய) மேலதிக தாபரிப்புச் சகாயப்படி கொடுபடும். இந்நிபந்தனைகளுக்கமையவே அவருடைய மனைவிக்குப் பயணச் செலவும் கொடுபடும்.

குறிப்பு.—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

### 5. நேர்முகப் பரீட்சை

தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்விதச் செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தாரதரப்பத்திரங்கள், பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப் படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக் கூடியவராய் இருக்க வேண்டும்.

### 6. உடன்படிக்கை

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், ஹொங்கொங்குக்குக் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன். விதிக்கப்படும் கற்றை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது நிர்மானிக்கப்பட வேண்டியது) ஸ்ரீ லங்கா குடியரசின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பயசு தொடர்பாக ஸ்ரீ லங்கா குடியரசுக்கும் அதனை வழங்கும் முகவாண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்த வரையில் சம்பளங்கள், சகாயப்படிகள் ஆதியன உட்பட) ஸ்ரீ லங்கா குடியரசுக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

### 7. வைத்தியப் பரீட்சை

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் ஹொங்கொங்கில் கற்றை நெறி ஒன்றினை மேற்கொள்தற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா என் பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினுல் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேறவேண்டும்.

8. உத்தேச கற்றை நெறியைப் பின்பற்றுவதால், அரசாங்க உத்தியோகத்தர்களைப் பொறுத்தவரையில், கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையாகார். ஏனையோரைப் பொறுத்தவரையில் அவர்கள் தமது ப்யிற்சி நெறியைப் பூர்த்தி செய்து திரும்பியதும் அவர்களுக்கு உத்தியோகம் அளிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்கவில்லை.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்குகும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவாாண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டபின் அவைகளை ஏற்றுக் கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்பட வேண்டிய விண்ணப்பங்கள் 1973-8-25 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு-2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூபா 10/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூபா 10/- பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதாவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத் தேவை அமையும். கல்வி அமைச்சின் கீழுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத் தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி அமைச்சின் காரியதரிசிக்கு அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

காரியதரிசி,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் விதி, கொழும்பு-2.
1973-7-30.

8-458—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72

---

## இலங்கைப் பத்திரிகைப் பேரவை
## வெற்றிடங்கள்

இலங்கைப் பத்திரிகைப் பேரவையில் பின்வரும் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் எழுதப்பெற்று பத்திரிகை ஆணையாளர், இலங்கைப் பத்திரிகைப் பேரவை, தகவல் ஒலிபரப்பு அமைச்சு, இல. 7, சேர் பாரன் ஜயதிலக மாவத்த, கொழும்பு 1 எனும் முகவரிக்கு 24.8.1973 ந் தேதியன்று அல்லது அதற்கு முன்னராகப் பதிவஞ்சல் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தைக் கொண்ட கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் "......................க்கான விண்ணப்பம்" என்று தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை அறிவிக்கப்படமாட்டாது.

பதவிகள் நிரந்தரமானவை. நியமனம் பெறுவோர் மூன்று வருடகாலத்திற்கு தகுதிகாண் நிலையில் இருப்பர். அவர்கள் ஊழியர் ஏற்பாட்டு நிதியத்திற்கு உதவுதொகை வழங்குவர்.

விண்ணப்பிக்கும் பதவிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தகைமைகளுக்குச் சான்றாக விண்ணப்பதாரர்கள் சான்றிதழ் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும் :—

1. பிறப்புச் சான்றிதழ்.
2. அதியுயர்ந்த க்ல்வித் தகைமைகளின் சான்றிதழ்.
3. அண்மையில் பெற்ற குணச் சான்றிதழ்கள் மூன்று.

(அரச சேவையிலிருக்கும் விண்ணப்பதாரர்கள் குணச்சான்றிதழ்களைச் சமர்ப்பிக்கவேண்டியதில்லை. எனின், அவர்களது விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவரது விதப்புரைகளுடன் அவர்களூடாக அனுப்பப்பெறல் வேண்டும்).

இவ்வர்த்தமானியின் பகுதி I, தொகுதி (IIஅ) வின் கீழ் அரச சேவைப் பதவிகளுக்கான நியமனங்களுக்கு ஏற்புடைத்தான பொது நிபந்தனைகளைக் கவனிக்குக.

பத்திரிகை ஆணையாளர்.

தகவல் ஒலிபரப்பு அமைச்சு,
இல. 7, சேர் பாரன் ஜயதிலக மாவத்த,
கொழும்பு 1, 1973, ஆகஸ்டு மீ 1 ந் திகதி.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

இலங்கைப் பத்திரிகைப் பேரவையில் ...................... பதவிக்கான விண்ணப்பம்.

1. விண்ணப்பதாரரின் பெயர் :—
   (1) முதற் பெயர் :————.
   (2) இதர பெயர் :————.
2. அஞ்சல் முகவரி :————.
3. வயது (1) 31.8.1973 ல் வருடங்கள் :————.
   (2) பிறந்த தேதி :————.
   (பிறப்புச் சான்றிதழ் பிரதி இணைக்கப்பட வேண்டும்)
4. தேசிய இனம் :————
5. விவாகமானவரா, விவாகமாகாதவரா ?:————.
6. கல்வித்தகைமைகள்/தொழில்நுட்பத் தகைமைகள் :————.
7. கல்லூரியிலிருந்து விலகிய காலத்திலிருந்து வகித்த பதவிகள்/பின்பற்றிய பயிற்சி நெறிகள் தொடர்பான விபரங்கள் :————.
8. அரசின்கீழ் அல்லது அரசகூட்டுத்தாபனத்தின் கீழ் முன்னர் பதவி வகித்திருப்பின் அத்தகைய சேவையினின்றும் விலகியதற்கான காரணங்கள் :————.
9. குற்றமொன்றிற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டிருப்பின் அக்குற்றத்தின் தன்மை, விதிக்கப்பட்ட தண்டனை எனும் விபரங்களைத் தருக :————.
10. நன்னடத்தைச்சான்றிதழ்கள் வழங்கியோரது பெயர், முகவரி, பதவி வழிப்பெயர் :————.

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களிலேவையேனும் தவறானவையாக அல்லது மெய்யற்றனவாகக் காணப்படுமிடத்து அத்தகைய கண்டுபிடிப்பு தேர்வுக்கு முன் நிகழின் எனது தகைமை நீக்கப்படுமெனவும், நியமனத்திற்குப் பின் கண்டுபிடிக்கப்படுமெனின், வேலை நீக்கப்படுவேனெனவும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

தேதி :————.

**இலங்கைப் பத்திரிகைப் பேரவை**

**பதவிப் பெயர்.**— ஆராய்ச்சி உத்தியோகத்தர்

**பதவி எண்ணிக்கை.**—ஒன்று.

**வேதன அளவுத்திட்டம்.**—மாதமொன்றுக்கு ரூ. 800—10 இன் 40 உம், 1 இன் 50 உம்—ரூ. 1,250. மாதமொன்றிற்கு ரூ. 920 ற்கு முன் வினைத்திறமைகாண் தடை உண்டு. உத்தியோகத்தர் பட்டத்தின் பின்னிலைப்பட்டம் பெற்றாலன்றி மாதமொன்றுக்கு ரூ.920 சம்பளத்திற்கு மேல் உயர்ச்சிபெறமாட்டார். முன்வேலை அனுபவமுடையோரை வேதன அளவுத்திட்டத்தில் பொருத்தமான ஒரு வேதன அளவில் அமர்த்துதல் கவனத்திற்கெடுக்கப்படும்.

**வயது.**—31.08.73 ல் 25-40 வருடங்கள் (அரசாங்க, கூட்டுத்தாபன சேவையிலுள்ளோருக்கு மேல்வயதெல்லைக் கட்டுப்பாடு ஏற்புடைத்தன்று).

**தகைமைகள்.**—அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றின் பட்டமொன்றுடன், பொதுசனத் தொடர்புச் சாதனங்கள், பொதுசனத் தொடர்பு என்பன பற்றிய அனுபவமும் பெற்றிருத்தல்.

**இலங்கைப் பத்திரிகைப் பேரவை**

**பதவி பெயர்.**—நுண்ணாய்வுத்தியோகத்தர்.

**பதவிகள் எண்ணிக்கை.**—இரண்டு.

**வேதனம் அளவுத்திட்டம்.**—மாதமொன்றுக்கு ரூ. 525/—825/- (5 இன் 20 உம், 8 இன் 25 உம்). மாதமொன்றிற்கு ரூ. 650/- க்கு முன் வினைத்திறமைகாண் தடை உண்டு.

**வயது.**—31.08.73 ல் 25-35 வருடங்கள். (அரசாங்க, கூட்டுத்தாபன சேவையிலுள்ளவர்களுக்கு மேல்வயதெல்லைக் கட்டுப்பாடு ஏற்புடைத்தன்று.)

**தகைமைகள்.**—சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் அல்லது தமிழில் அல்லது எல்லாவற்றிலும் நல்ல அறிவுடன், அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாயிருத்தல் வேண்டும்.

அல்லது

செலவு முகாமைக் கணக்காளர் பகுதி I உம், பகுதி II உம் பெற்று நுண்ணாய்வில் அனுபவமும் பெற்றிருத்தல்.

அல்லது

அரசாங்கத்தில் அல்லது கூட்டுத்தாபனத்தில் ஒரு நுண்ணாய்வுத்தியோகத்தராக ஆகக்குறைந்தது 3 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

**இலங்கைப் பத்திரிகைப் பேரவை**

**பதவிப் பெயர்.**—இலிகிதர், தரம் II.

**பதவிகள் எண்ணிக்கை.**—ஒன்று.

**வேதனம் அளவுத்திட்டம்.**—மாதமொன்றுக்கு ரூ. 350—15 இன் 15—ரூ. 575/-. மாதமொன்று ரூ. 395 க்கு முன்னர் வினைத்திறமை காண் தடையுண்டு. முன்வேலை அனுபவமுடையோரை வேதன அளவுத்திட்டத்தின் பொருத்தமானதொரு வேதன அளவில் அமர்த்துதல் கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்படும்.

**வயது.**—31.08.73 இல் 25 வயதுக்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும்.

**தகைமைகள்.**—தரம் II 'அ' பிரிவு தகவுப் பரீட்சையில் சித்தியெய்தியுள்ள அரசாங்க பொது எழுதுநர் சேவையிலுள்ள எழுதுநர்கள் அல்லது 'ஆ' பிரிவில் 6 வருடங்கள் சேவையாற்றியோர்.

அல்லது

III ஆம் தரத்தில் 5 வருடங்கள் சேவையாற்றியுள்ள அரச கூட்டுத்தாபனங்களின் எழுதுநர்கள்.

அல்லது

அங்கீகரிக்கப்பெற்ற பல்கலைக்கழகமொன்றின் இடைமானிப் பரீட்சையில் சித்தியெய்தியுள்ளோர்.

**இலங்கைப் பத்திரிகைப் பேரவை**

**பதவிப் பெயர்.**—சரவைபார்ப்பவர்.

**பதவிகள் எண்ணிக்கை.**—மூன்று.

**வேதன அளவுத்திட்டம்.**—மாதமொன்றுக்கு ரூ. 350—15 இன் 15—ரூ. 575/- மாதமொன்றுக்கு ரூ. 395/- ற்கு முன் வினைத்திறமைகாண் தடையுண்டு.

**வயது.**—31.08.73 ல் 20-35 வருடங்கள்.

**தகைமைகள்.**—க. பொ. த. சாதாரண தரத்தில் ஒரே தடவையில் 6 பாடங்களிற் சித்தியும், ஒரு மொழியைப் பாடமாகக் கொண்டு ஒரு தடவையில் 6 பாடங்களில் திறமைச்சித்தியும் பெற்றிருத்தல் அல்லது சி. பொ. த. ப. அல்லது அதற்குச் சமமான பரீட்சையிற் சித்தியடைந்திருத்தல்.

**இலங்கைப் பத்திரிகைப் பேரவை**

**பதவிப் பெயர்.**—மொழிபெயர்ப்பாளர், உரைபெயர்ப்பாளர்.

**பதவிகள் எண்ணிக்கை.**—இரண்டு.

**வேதன அளவுத்திட்டம்.**—மாதமொன்று ரூ. 350 (15 இன் 15)—ரூ. 575. மாதமொன்றுக்கு ரூ. 395 ற்கு முன்னர் வினைத்திறமைகாண் தடை ஒன்று உண்டு.

**வயது.**—31.08.73 இல் 30-45 வருடங்கள் (அரசாங்க, கூட்டுத்தாபன சேவையிலுள்ளோர்க்கு மேல் வயதெல்லைக் கட்டுப்பாடு ஏற்புடைத்தன்று).

**தகைமைகள்.**—(அ) சிங்களத்தில் அல்லது தமிழில் இலண்டன் பல்கலைக்கழக கல்விப் பொதுத் தராதர (உயர்தர)ச் சான்றிதழ் ;

அல்லது

சிங்களம் அல்லது தமிழில் கல்விப் பொதுத்தராதர (உயர்தர)ச் சான்றிதழ் ;

அல்லது

சிங்களம் அல்லது தமிழ் (விசேட சிங்களம் அல்லது விசேட தமிழ் அல்ல) எனும் பாடத்துடன் உயர்பாடசாலைத் தராதரப் பத்திரம் ;

அல்லது

சிங்களம் அல்லது தமிழை ஒரு பாடமாகக் கொண்டு இலண்டன் பல்கலைக்கழக கலை இடைமாணித்தேர்வுச் சான்றிதழ் அல்லது இலங்கைப் பல்கலைக்கழக பொதுக்கலைத் தகுதிப் பரீட்சைச் சான்றிதழ் ;

இத்துடன்

(ஆ) ஆங்கில மொழியில் அல்லது ஆங்கில இலக்கியத்தில் திறமைச்சித்தியுடன் 1957 யூலை மாதத்தில் அல்லது அதற்கு முன்னராக வழங்கப்பட்ட சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் (ஆங்கில மொழிமூலம்) ;

அல்லது

சி.பா.த.ப. பரீட்சையில் ஆங்கில மொழியில் (பாடத்திட்டம் 'அ') திறமைச்சித்தி பெற்றிருத்தல் அல்லது க. பொ. த. (சாதாரணதர)

பரீட்சையில் ஆங்கில இலக்கியத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் ;

அல்லது

சமமான அல்லது மேலான பரீட்சையொன்றில் ஆங்கிலத்தில் சித்தியெய்தியிருத்தல் ;

இத்துடன்

(இ) க. பொ. த. (சாதாரணதர) வில் இருதடவைகளுக்கு மேற்படாது ஆங்கில மொழி பாடத்திட்டம் 'அ' வில் அல்லது ஆங்கில இலக்கியத்தில் திறமைச்சித்தி உட்பட ஆறு பாடங்களில் சித்தியெய்திருத்தல் ;

இத்துடன்

மொழிபெயர்ப்பில் அல்லது உரைபெயர்ப்பில் ஆகக்குறைந்தது 5 வருட அனுபவம் பெற்றிருத்தல் அல்லது நீதிமன்றத்தில்/நியாய சபை போன்றவற்றில் உரைபெயர்ப்பு அனுபவமுடைய உத்தியோகத்தராயிருத்தல், பின்னையதைப் பொறுத்தளவில், மேற்கூறியவை பொருந்தா.

இலங்கைப் பத்திரிகைப் பேரவை

**பதவிப் பெயர்.**—பாதுகாப்பு, போக்குவரத்து உத்தியோகத்தர்.

**பதவிகள் எண்ணிக்கை.**—ஒன்று.

**வேதன அளவுத்திட்டம்.**—மாதமொன்றுக்கு ரூ. 350—(15 இன் 15) —ரூ. 575/- மாதமொன்றுக்கு ரூ. 395/- க்கு முன்னர் வினைத்திறமை காண் தடையுண்டு.

**வயது.**—31.08.73 இல் 18-35 வருடங்கள் (அரசாங்க, கூட்டுத்தாபனச் சேவையிலுள்ளோருக்கு மேல்வயதெல்லைக் கட்டுப்பாடு ஏற்புடைத்தன்று).

**தகைமைகள்.**—சி. பா. த. ப. பரீட்சையில் அல்லது க. பொ. த. பரீட்சையில் ஒரே தடவையில் ஆறுபாடங்களில் சித்தியும், இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் ஆறு பாடங்களில் திறமைச் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். சிறந்த உடற்கட்டு உடையோருக்கும் பொலிசுச் சேவை, படைக்கலச் சேவையில அனுபவம் உள்ளோருக்கும் முன்னுரிமை அளிக்கப்படும். மோட்டார் வாகனங்கள் செலுத்துவதில் அனுபவம் பெற்றிருப்பதுடன், மோட்டார் வாகனஞ் செலுத்தும் தகைமைச் சான்றிதழையும் பெற்றிருத்தல் வேண்டும்.

இலங்கைப் பத்திரிகைப் பேரவை

**பதவிப் பெயர்.**—எழுதுநர், தட்டெழுத்தாளர்.

**பதவிகள் எண்ணிக்கை.**—மூன்று.

**வேதன அளவுத்திட்டம்.**—மாதமொன்றிற்கு ரூ. 265/- —16 இன் 10—ரூ. 425/-. மாதமொன்றிற்கு ரூ. 295/- ற்கு முன் வினைத்திறமைகாண் தடை உண்டு.

**வயது.**—31.08.73 ல் 18—24 வருடங்கள்.

**தகைமைகள்.**—(அ) க. பொ. த. சாதாரணதரத்தில் ஒரே தடவையில் 6 பாடங்களிற் சித்தியடைந்திருக்க வேண்டும். இத்துடன் இருதடவைக்கு மேற்படாமல் எண்கணிதத்தையும் ஒரு மொழியையும் உள்ளடக்கிய நான்கு பாடங்களில் திறமைச்சித்தியெய்தியிருக்க வேண்டும்.

அல்லது

சி. பா. த. ப. அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் எண்கணிதத்தையும் ஒரு மொழியையும் உள்ளடக்கிய 4 பாடங்களில் திறமைச்சித்தி.

(ஆ) தட்டெழுத்து அறிவு அவசியம்.

3-526—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72

---

இலங்கை வான் படை வெற்றிடங்கள்—பயில் இளவல்

இலங்கை வான்படையில் நான்கு கிளைகளின் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பயில் இளவல்—வலவன்
பயில் இளவல்—தொழினுட்பர்
பயில் இளவல்—உபகரணம்
பயில் இளவல்—நிருவாக/அணி

இவ்வறிவித்தலின் 10 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள தகைமைகளையுடைய வேட்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் நேர்ச்சியான பயிற்சிக்காலத்தின் பின் மாட்சிமை தங்கிய ஜனாதிபதி அவர்களால் நிலை ஆணைபெற்ற வழிகாட்டி உத்தியோகத்தர் பதவியில் அமர்த்தப்படுவர்.

பயில் இளவலாக ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து :—

2. (அ) வேட்பாளர்கள் இலங்கை வான்படையில் ஐந்தாண்டுக் காலத்துக்கு ஒழுங்காகப் பயில்வதற்கு ஒப்பந்தம் செய்து பதிவு செய்தல் வேண்டும்.

(ஆ) வான்படை முனைனருடனை ஆலோசனையுடன் பாதுகாப்பு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரினல் தீர்மானிக்கப்பட்டபடி இலங்கையில் அல்லது வெளிநாட்டில் பயிற்சி பெறும்படி பயில் இளவல்கள் வேண்டப்படுவர்.

(இ) பயிற்சிக்காலத்தின் போது பயில் இளவல்கள் எல்லோரும் வான் படைச் சட்டங்களுக்கு உட்படுத்தப்பட்டிருப்பர்.

(ஈ) **அரசாங்க சேவைச் சகாயநிதிக்கு உதவு தொகை.**—ஒவ்வொரு கடெற் வீரரும் திரட்டிக் கொள்ளப்பட்டதும் அரசாங்க சேவைச் சகாய நிதிக்குத் தனது உதவு தொகையாகத் தனது ஒன்றுதிரட்டிய சம்பளத்தின் ஆறு சதவீதத்தைக் கழித்தற்கு எழுத்துருவிலான தனது சம்மதத்தைக் கொடுக்குமாறு வேண்டப்படக்கடவர்.

(உ) பயிற்சிக்காலத்தில் பயில் இளவல்கள் அனைவருக்கும் ஆண்டொன்றுக்கு ரூபா 5,160 திரட்டிய வேதனமாக வழங்கப்படும். பயில் இளவல் சேவைக்காலத்தில் எது வித வேதன உயர்ச்சிகளுக்கும் உரித்துடையராகார்.

(ஊ) பறத்தற் பயிற்சி பெறும் பயில் இளவல் ஒருவருக்கு அவரது வழமையான சம்பளத்துடன் சேர்த்து நாளொன்றுக்கு ரூபா 1 வீதம் அறிவுறுத்துரைப் பறத்தற் சம்பளம் வழங்கப்படும். எப்படியாயினும் ஏற்பாடான விடத்து ஜெட்விமானத்தில் பயிற்சிபெறும் பயில் இளவல் ஒருவர் ஆகக்குறைந்தது 30 மணி நேரம் பறத்தற் பயிற்சியில் ஈடுபட்டு அவற்றுள் 20 மணி நேரம் ஜெட் விமானத்தில் பறந்திருப்பின் நாளொன்றுக்கு ரூபா 4 வீதம் பறத்தற் சம்பளம் பெறுவார்.

(எ) பயில் இளவல் ஒவ்வொருவரும் அரசாங்கக் கணக்கில் சீருடைகள், உபகரணம், மருத்துவ வசதிகள் என்பன வற்றை பயில் இளவற் சேவைக் காலத்தில் பெறுவர்.

(ஏ) பயிற்சிக்காலத்தில் பயில் இளவல்கள் யாவரும் வான்படை உண்டிச்சாலையில் தங்குவதற்கு அனுமதிக்கப்பட்டு உணவு அளிக்கப்படுவர். உணவுக்கான பணமாக இவரது நற்காலிக அடிப்படை வேதனத்தின் 3½ வீதத்தை இவர் செலுத்த வேண்டியது.

(ஐ) (i) பயிற்சியிலுள்ளபோது பயில் இளவல் ஒருவர் தாமாகவே தமது வேட்பாளர் நிலையை முடித்துக் கொள்ளுமிடத்து இவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் அத்தகைய பயில் இளவலின் கணக்கில் அக்காலம் வரை இலங்கை குடியரசால் அவர் மட்டில் செலவு செய்யப்பட்ட பணத்தொகையை மீளளிப்புச் செய்யுமாறு வேண்டப்படுவர் ;

(ii) பயிற்சி நெறிக்காலத்தின் எந்நேரத்திலாவது அதிகாரிகளினல் பயில் இளவல் ஒருவர் துர்நடத்தை காரணமாக அல்லது தமது சொந்தக் கட்டுப்பாட்டுக்குட்பட்ட பிறகாரணங்களுக்காகப் பயிற்சிக்குத் தகுதியற்றவரென அறிவிக்கப்பட்டால் இவரின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் இவரின் கணக்கில் இலங்கை குடியரசால் செலவு செய்யப்பட்ட தொகையை மீளளிப்புச் செய்யுமாறு வேண்டப்படுவர்.

(ஒ) பெற்றோர் அல்லது பாதுகாவலர் விண்ணப்பப்படிவத்தின் 21 ஆம் கூட்டிற்குள் கொடுக்கப்பட்டதற்கிணங்க இதன் கீழ் உள்ள உபபந்தி (ஐ) (i), (ii) இலும் மேலே கொடுக்கப்பட்டுள்ள விதத்தில் பிரகடனப்படுத்திக் கையொப்பமிட்டு விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டியது. தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் இப்படிவத்தில் உள்ளபடி இந்த அபேட்சகர்களின் நியமனத்திற்கு முன் இலங்கை குடியரசால் ஓர் உறுதியான உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டியது.

(ஓ) பயிற்சி முடிந்ததும் பயில் இளவல்கள் ஆணைபெற்ற வழிகாட்டி உத்தியோகத்தர்களாக இலங்கை வான்படையின் தமது சொந்தக் கிளைகளில் நியமனம் பெறுவர். பயில் இளவல் ஒருவர் ஆணைபெற்ற நியமனம் பெற்ற விடத்து தாம் பயில் இளவல்களாகச் சேர்ந்து வான்படையிலான தமது ஈடுபாட்டிலிருந்து விடுவிக்கப்படுவர். ஆணைபெற்ற பின், ஆகக்குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்கேனும் இலங்கை வான்படையில் சேவை செய்ய வேண்டியது.

ஆணைபெற்றதும் இவர்களுக்கான வேதனமும் படிகளும்.—

3. இலங்கை அரசவான்படையில் ஆணைபெற்ற உத்தியோகத்தர் ஒருவருக்கான வேதனமும் படிகளும் சேவை நிபந்தனைகளும் பின்னுல் தரப்பட்டபடி :—

(அ) திரட்டிய வேதனம்.—

முன்னோடி உத்தியோகத்தர் : ஆண்டொன்றுக்கு ரூபா 5,880

பறத்தல் உத்தியோகத்தர் : ரூபா 7,560—5×18 ஆண்டொன்றுக்கு ரூபா 8,400.

பறத்தற் பொறுப்பு லெப்டினன் : ரூபா 9,240—8×180 ஆண்டொன்றுக்கு ரூபா 10,680.

சதுரவியூக முதல்வர் : ரூபா 11,400—8×240 ஆண்டொன்றுக்கு ரூபா 13,320.

(பக்க மூனேரும் அதற்கும் மேலான பதவி வரிசைகளுக்கும் பொருத்தமான வீதங்களைப் பெறவிரும்பின், அவற்றை இத்தலைமை அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.)

(ஆ) விவாகப்படி.—விவாகம் முடித்த உத்தியோகத்தர் ஒருவருக்கான விவாகப்படி அரசாங்க சேவைக்குப் பொருத்தமான வீதங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் ஏற்ப வழங்கப்படும் ;

(இ) பறத்தல் வேதனம்.—பொதுக் கடமைகள் கிளை உத்தியோகத்தர்கள் (முன்னோடிகள்) தமது சாதாரண வேதனத்துடன் சேர்த்துப் பின்வரும் வீதத்திலானதோர் பறத்தல் வேதனத்தையும் பெறுவர்.

| | நாளொன்றுக்கு ரூ. ச. |
|---|---|
| முன்னோடி உத்தியோகத்தர் ... | 8 0 |
| பறத்தல் உத்தியோகத்தர் ... | 8 89 |
| பறத்தற் பொறுப்பு லெப்டினன் ... | 9 77 |
| சதுரவியூக முதல்வர் ... | 9 77 |

(ஈ) ஆணைபெறுந்தப்பட்டதும் வெப்பவலைய மேலுடைக்கான படியாக முதலில் ரூபா 1,000 வழங்கப்படும். பயிற்சித் தேவைகளுக்கென வெளிநாட்டுக்கு (மட்டான இயல்புடைய சுவாத்தியமுள்ள) அனுப்பப்பட்டவிடத்து மேலும் ரூபா 1,300 மேலுடைப் படியாக வழங்கப்படும். சீருடைகளைப் பேணுவதற்கான படியாக ரூபா 25.00 ஆணை பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்தின் பின் ஒவ்வொரு மாதமும் பேனற் படியாக வழங்கப்படும். பயிற்சி/ஆணை முடிவுற்றதன் பின் உத்தியோகத்தரால் தம்முடன் வைத்திருக்கும் சீருடைகளுக்கான செலவுகள் யாவும் தொடக்க மேலுடைப் படியிலிருந்து கழிக்கப்படும் ;

(உ) பிறபடிகள் (பிரிந்து வாழ்தல், கடல் கடந்த, இணைந்த போன்றவை) யாவும் வான் ஒழுங்கு விதிகளில் விளக்கியுள்ளபடி வழங்கப்படும்.

4. அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு உதவு தொகை.—ஒவ்வொரு அலுவலரும் இரட்டிக் கொள்ளப்பட்டதும் அரசாங்க சேவைச் சகாய நிதிக்குத் தனது உதவுத் தொகையாகத் தனது மூன்று திரட்டிய சம்பளத்தின் ஆறு சதவீதத்தைக் கழித்தற்கு எழுத்துருவிலான தனது சம்மதத்தைக் கொடுக்குமாறு வேண்டப்படக்கடவர்.

ஆணைபெற்ற பின்னுன சேவை நிபந்தனைகள் :

5. இலங்கை வான்படை உத்தியோகத்தர் ஒருவரின் சேவை வாய்ப்பும் நிபந்தனைகளும் 1951 ஆம் ஆண்டு ஏப்பிரில் 27 ஆம் திகதிய 10,240 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரமானதைப் போன்றதே.

6. மணம் முடியாத உத்தியோகத்தர் ஒருவர் உத்தியோகத்தரின் சிற்றுண்டிச் சாலையில் வசிக்க வேண்டியது. இவருக்கு தட்டுமுட்டுகளுடன் வதிவிடமும் உணவும் வழங்கப்படும். இவரது தற்காலிக அடிப்படை வேதனத்திலிருந்து 7% வாடகையாகக் கழிக்கப்படும். இவர் தமது உணவுக்கும் பணம் செலுத்த வேண்டியது. சொக்கன் சேவை அரசாங்கக் கணக்கில் ஏற்படுத்தப்படும்.

7. திருமணம் முடித்த ஒரு உத்தியோகத்தருக்கு கிடைக்கக் கூடியதாயின் தட்டுமுட்டுகளுடன் கூடிய விடுதியொன்று ஏற்படுத்திக் கொடுக்கப்படும். அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருத்தமான வகையில் வாடகை திரும்பப் பெறுதல் அமையும். சொக்கனுக்கான படியாக மாதமொன்றுக்கு ரூபா 75 இவருக்கு வழங்கப்படும்.

8. வான்படை உத்தியோகத்தர்கள் எந்த நேரத்திலும் உலகின் எந்தப் பாகத்துக்கும் கடமைக்கேனும் பயிற்சிக்கேனும் அனுப்பப்படுவதற்குட்பட்டவர்களே.

9. தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை செயற்படுத்துவதற்கென 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க ஆட்சிமொழிச் செய்சட்டத்தின் ஏற்பாடுகளை செயற்படுத்துவதன் பொருட்டு ஏற்கனவே செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கும் அல்லது இனிச் செய்யப்படும் விதிகள் ஏதாவது இருப்பின் அவற்றிற்கும் அமைவாக நடந்து கொள்ளும்படி வேண்டப்படுவர்.

10. வேண்டப்படும் அடிப்படைத் தகைமைகள்.—

(அ) தேசிய இனம்.—வேட்பாளர்கள் இலங்கைக் குடிகளாயிருத்தல் வேண்டும் ; அதாவது

(i) வழிவந்த இலங்கைக் குடிமக்களாக ; அல்லது,

(ii) பதிவு மூலமான இலங்கைக் குடிமகனுயிருத்தல் வேண்டும்.

(ஆ) வயது.—வேட்பாளர்கள் 1973 செப்டெம்பர் 1 ஆம் திகதியன்று 17 வயதும் 6 மாதங்களுக்கு குறையாதவராயும் 22 வயதுக்கு மேற்படாதவராயுமிருத்தல் வேண்டும். 1973 செப்டெம்பர் 1 ஆம் திகதியன்று 28 வயதுக்கு குறைவான வயதையுடைய பட்டதாரி வேட்பாளர்கள் எப்படியாயினும் பயில் இளவல்களாகத் தெரிவு செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்படுவர்.

(இ) கல்வி.—பின்வரும் தகைமைகளில் ஒன்றையாவது வேட்பாளர்கள் கொண்டிருக்க வேண்டியது :—

(i) பொதுக்கடமைகள் (முன்னோடிகள்) கிளைகள்

(அ) க. பொ. த. பரீட்சை (சாதாரண) பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். கணிதத்திலும் பௌதிகவியலிலும், ஆங்கில பாஷை உட்பட சித்தியடைந்திருக்க வேண்டும்.

(ஆ) பட்டதாரிகள் (நன்கு மதிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின்) ஆயின் க். பொ. த. (சாதாரணதரப்) பரீட்சையில் கணிதத்திலும், பௌதிகவியலிலும் ஆங்கில பாஷையிலும் சித்தியெய்திருக்க வேண்டும்.

(ii) தொழில்நுட்பக் கிளைகள்

(அ) க.பொ.த. (சாதாரணப்) பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். இவ்வாறு பாடங்களில் கணிதத்திலும் பௌதிகவியலிலும் திறைமை சித்தியும் ஆங்கில பாஷையில் சாதாரண சித்தியும் அடைந்திருக்க வேண்டும்.

(ஆ) பட்டதாரிகள் (நன்கு மதிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின்) ஆயின் க.பொ.த. (சாதாரணம்) பரீட்சையில் கணிதத்திலும், பௌதிகவியலிலும் திறமை சித்தியும், ஆங்கில பாஷையில் சாதாரண சித்தியும் அடைந்திருக்க வேண்டும்.

(iii) உபகரணமும் நிர்வாகமும்/பேரணிக்கிளைகள்

(அ) க.பொ.த. (சாதாரணப்) பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியெய்தியிருக்கவேண்டும். கணிதத்தில் கட்டாயமாக சித்தியெய்தியிருக்க வேண்டும்.

(ஆ) நன்கு மதிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டதாரி, கணிதத்தில் சாதாரண சித்தி (க.பொ.த.) பரீட்சையில் கட்டாயமாக சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

(iv) விளையாட்டுத்திறமை உடையவர்கட்கு விசேட கவனம் கொடுக்கப்படும்.

(ஈ) சிவில் நிலை.—வேட்பாளர்கள் திருமணமாகாதவராயிருத்தல் வேண்டும். (பயில் இளவல் ஒருவர் பயிற்சிக் காலத்தின்போதும் ஆணை பெற்றதன் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு மணம் முடிப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்) ;

(உ) மருத்துவ நிலை.—வான்படை மருத்துவ நிலைக்கு வேட்பாளர்கள் அனைவரும் இணங்கியிருக்க வேண்டும். (ஆகக் குறைந்த உயரம் 5 அடி 5 அங்குலம், மார்பு 32 அங்குலம், நிறை 105 இருத்தலும் அதற்கு மேலாகவும்) ;

(ஊ) பறத்தல் உளச்சார்புத் தேர்வு.—பொதுக் கடமைகள் (முன்னோடிகள்) கிளைக்கான வேட்பாளர்கள், யாவரும் இறுதித் தேர்வுக்கு முன் பறத்தல் உளச்சார்புக்கான வான்கோண்டேகு பரீட்சைக்கு உட்படுமாறு வேண்டப்படுவர்.

**விண்ணப்பகாரர்களுக்கான அறிவுறுத்துலைகள்**

11. பயில் இளவல்களுக்கான விண்ணப்பங்கள் இதன் கிழ் 21 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள படிவத்தின் பிரதியில் எழுதப் பட்டு, வான்படை தளபதி, அ. அ. பெட்டி 594, கொழும்பு, என முகவரியிடப்பட்டு 1973 செப்டெம்பர் 3ஆம் திகதிக்கு முன்ன தாக கிடைக்கும்படி அனுப்பப்படவேண்டும். விண்ணப்பம் அனுப் பப்படும் தபாலுறைகளில் "வான்படை பயில் இளவல் விண்ணப் பம்" என எழுதப்படவேண்டும்.

12. விண்ணப்பங்களுடன் சேர்த்து குணச்சான்றிதழ்கள் அனுப் பப்பட வேண்டும். இவற்றுள் ஒன்று விண்ணப்பகாரரின் சொந்த வாழ்க்கையை கடந்த ஒரு ஆண்டுக்கேனும் தெரிந்தவரான வயது முதிர்ந்த பொறுப்புள்ள ஒருவரிடமிருந்தும் மற்றையது கடைசி யாகச் சென்ற பாடசாலையின் அதிபரிடமிருந்து விண்ணப்பகார ரின் கல்வி மற்றும் உடற்பயிற்சியிலான அருஞ்செயல்களைக் குறிப் பிடுவதாக இருக்க வேண்டும்.

13. தெரிவுச் சபையினால் நேர்முகப் பரீட்சைக்கெனத் தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்களுக்கு அறிவிக்கப்படும். இவர்கள் கொழும்பில் குறிப்பிட்ட திகதியிலும் நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும்படி வேண்டப்படுவர். இது தொடர்பான பயணச் செலவுகள் அல்லது வேறு செலவுகள் ஏதும் இலங்கை அரசாங்கத்தினால் செலுத்தப்படமாட்டாது. நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்படாத வேட்பாளர்களுக்கும் இதை யிட்டு அறிவிக்கப்படும்.

14. விண்ணப்பங்கள் யாவும் கீழே 21 ஆம் பந்தியில் தரப்பட்ட படியான படிவத்தில் செய்யப்படவேண்டும். விண்ணப்பப்படிவங் கள் வழங்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் யாவும் எல்லாவகை யிலும் இவ்வறிவித்தலில் வேண்டப்பட்ட தேவைகளுக்கமைவாக இருக்க வேண்டியது. இவற்றிற்கு அமைவாக இல்லாத விண்ணப் பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

15. விண்ணப்பத்தில் தரப்படும் கூற்றுக்களில் எவையேனும் சரியானவை அல்லவெனத் தெரிவு செய்யப்படுமுன் கண்டுபிடிக்கப் பட்டவிடத்து விண்ணப்பகாரர் தகைமை அற்றவரெனத் தள்ளு படி செய்யப்படுவதற்கும் தெரிவுசெய்யப்பட்ட பின் இது கண்டு பிடிக்கப்பட்டவிடத்து உடன் விலக்கப்படுவதற்கும் உட்பட்டவரா கின்றார்.

17. விண்ணப்பகாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரு வனவற்றின் பிரதிகளை இணைக்க வேண்டியது :—

(i) பிறப்புச்சான்றிதழ் (சமயத் தீட்சைச் சான்றிதழ் அல்லது கல்விச் சட்டக் கோவைகளின் நோக்கங்களுக்கென வழங் கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட் டாது) ;

(ii) பெற்ற உயர் கல்வித் தகைமைச் சான்றிதழுடன் ;

(iii) மேலே 12 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நற்சான்றிதழ் கள்.

முக்கிய ,குறிப்பு.—இந்தச் சான்றிதழ்களினதும் நற்சான்றிதழ் களினதும் மூலப் பிரதிகள் விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட் சைக்கு அழைக்கப்படும்போது மட்டுமே சமர்ப்பிக்கப்படல் வேண் டும்.

18. வேட்பாளர் ஒருவரை சிபாரிசு செய்யவிரும்பும் ஒருவர் அவ ருக்கோர் சான்றிதழ் வழங்குவதன் மூலம் இதனைச் செய்யலாம். வேட்பாளர் ஒருவரின் தெரிவின் பொருட்டு எந்த விதமான ஆதரவு தேடுதல் அல்லது செல்வாக்கைப் பெறுவதற்கான முயற்சி கள் அந்த வேட்பாளரின் தகைமையை நீக்கிவிடும்.

19. தெரிவுச்சபையினால் பெறப்படும் விண்ணப்பங்களிலிருந்து வான்படைத் தலைமை அலுவலகத்தில் புதுமுகத் தெரிவு நடாத்தப் படும். வேட்பாளர்கள் புதுமுகத்தேர்வு, மருத்துவச் சோதனை பறத்தல் உளச் சார்புப் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண் டும். (பொதுக் கடமைகள் (முன்னோடிகள்) இனைக்கு மட்டுமே பொருத்தமுடையதாகும்).

20. இறுதித் தெரிவு பாதுகாப்பு வெளிநாட்டலுவல்கள் அமைச் சினால் நியமிக்கப்படும் சபையொன்றினால் வேண்டப்பட்ட தரா தரங்களையுடைய வேட்பாளர் மத்தியிலிருந்து செய்யப்படும்.

21. விண்ணப்பப்படிவம் :—

**இலங்கை வான்படை .............................................கிளையில்**

**பயில் இளவலுக்கான விண்ணப்பம்**

"அ" சொந்த விபரங்கள்

1. குடும்பப் பெயர் :————.
   வேறு பெயர்கள் :————.

2. தற்போதைய முகவரி :————.
   தொலைபேசி இலக்கம் :————.
   அணித்தாயுள்ள புகைவண்டி நிலையம் :————.
   அணித்தாயுள்ள பொலிசு நிலையம் :————.
   தந்தி அலுவலகம் :————.

3. நிரந்தர முகவரி :————.

4. திருமண நிலை :————.

5. பெற்றோர் பற்றிய விபரம் (குடியுரிமை வழங்கப்பட்டவிடத்து சான்றிதழின் திகதியும் இலக்கமும் குறிப்பிடப்பட வேண் டும்):—

   (அ) தந்தையின் பெயர் :————.
   பிறந்த இடம் :————.
   பிறந்தபின் போதான குடிமை :————.

   (ஆ) தாயாரின் பெயர் :————.
   பிறந்த இடம் :————.
   பிறப்பின்போதான குடிமை :————.

6. தந்தையின் தொழில் :————.

7. பள்ளிக்கூட, பல்கலைக்கழக நெறி விபரங்கள் :—

   (அ) பள்ளிக்கூடத்தின்/அல்லது பல்கலைக்கழகத்தின் பெயர் :————.

   (ஆ) சேர்ந்த திகதி :———— விலகிய திகதி :————.

   (இ) சித்தியெய்திய அரசாங்கப் பரீட்சைகள் :————.

8. பள்ளிக்கூடத்திலிருந்து விலகியபின் செய்த தொழில் விபரங் கள் :—

   (அ) பணிகொள்பவர் பெயர் :————.

   (ஆ) தொழிலின் தன்மை :————.

   (இ) சேவைக்காலம் : ———— தொடக்கம் ———— மட் டும்.

9. இதற்கு முன்பு படைதாங்கு சேவைகள் எவற்றிற்காவது விண்ணப்பித்துள்ளீரா ? :————.

   (விண்ணப்பித்த திகதி, பதவி, சேவையின் பெயர் என் பனவற்றைக் குறிப்பிடவும்)

10. சிவில் அல்லது தரைப்படை மன்றினால் எப்போதாவது நன் னடத்தைப் பிணையில் விடப்பட்டீரா ? :————.
   (அப்படியாயின் விபரம் தருக)

"ஆ" வேண்டப்படும் தகைமைகள்

(இவ்வறிவித்தலின் 10 ஆம் பந்தியில் வேண்டப்பட்டபடி)

11. பிறந்த திகதி :————.
   வயது :— ஆண்டுகள் :——, மாதம் ;——, நாட்கள் ;——.
   பிறந்த இடம் :————.
   குடிமை—பிறப்பின்போது :————.
   இன்று :————.

12. கூடுதலான தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சை, திகதி, பாடங்கள், பரீட்சை நடாத்தும் நிறுவனம் அல் லது திணைக்களம் என்னும் விபரங்களை தரவும்):——.

13. (அ) உயரம் :————.
   (ஆ) மார்பு :————.
   (இ) நிறை :————.

"இ" கூடுதலான தகைமைகள்

(பின்வரும் கூடுகளில் செய்துள்ள உரிமைக் கோரிக்கை களை எண்பித்தல் வேண்டும்)

14. விளையாட்டுகளில் பெற்ற பெறுபேறுகள் பற்றிய விபரங்கள் (விளையாட்டுக்குழுக்கள், பங்கு கொண்டபோட்டிகள், எய் திய தரம் என்பன பற்றிய விபரங்களைத் திகதிகளுடன் குறிப்பிடவும்) :————.

15. பள்ளிக்கூடத்தில், பல்கலைக்கழகத்தில் அல்லது வெளிநிறு வனங்களுடன் ஈட்டிய குறிப்பிடத்தக்க சாதனைகள் (திகதிகளுடன் விபரம் தரவும்) :————.

16. ஏதாவதொரு ஒழுங்கான படைசேவையில், தொண்டர்படை யில் அல்லது சாரணர் படையில் செய்துள்ள சேவை விப ரங்கள் (சேவையின் அல்லது படையின் பெயர், வகித்த உயர்வரிசைப் பதவியும் சேவைக் காலமும் :————.

17. இப்பதவிக்கான விசேட தகைமைகள் (உதாரண, பறத்தல் உளச்சார்புப் பரீட்சைக்குட்படுத்தப்பட்டுள்ளீரா ? திகதி யுடன் விபரம் தரவும்) :————.

"ஈ" நற்சான்றிதழ்கள்
(இவ்வறிவித்தலின் 18 ஆம் பந்தியை பார்க்கவும்)

18. விபரங்கள் :

| பெயர் | பதவிப் பெயர் | தற்போதைய முகவரி |
|---|---|---|
| | | |

"உ" உறுதியுரைகள்

19. விண்ணப்பகாரர் கையொப்பமிடவேண்டிய உறுதியுரை :

மேலேயுள்ள கேள்விகளுக்கு நான் கொடுத்துள்ள விடைகள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியமட்டும் சரியானவை என்று எனது கௌரவத்தின் மீது ஆணையிட்டு உறுதிப்படுத்துகிறேன். இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் படி இலங்கை வான்படையில் பயில் இளவல் நிலைக்கு தெரிவுசெய்யப்படும் வேட்பாளர்களின் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடைமுறையை நான் படித்து விளங்கிக்கொண்டேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

20. விண்ணப்பக்காரரின் பெற்ரூர்/பாதுகாவலரால் கையொப்பமிடப்பட வேண்டிய உறுதியுரை :—

(அ) நான், இலங்கை வான்படையில் பயில் இளவல் நிலைக்கான விண்ணப்பகாரரும் மேலேயுள்ள விண்ணப்பப்படிவத்தின் 19 ஆம் கூட்டில் கையொப்பமிட்டுள்ளவருமாகிய..............ன் பெற்ரூர்/பாதுகாவலர் ஆவேன்.

(ஆ) மேலே பெயர் குறிப்பிட்ட விண்ணப்பக்காரர் பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்படுமிடத்து பின்வருவனவற்றிற்குப் பொறுப்பாயிருப்பேன் என்று இத்தால் ஏற்றுக்கொள்கிறேன் :—

(i) மேலே பெயர் குறிப்பிடப்பட்ட விண்ணப்பக்காரர் பயிற்சிக் காலத்தில் தாமாகவே பயிற்சியிலிருந்து விலகினால் அக்காலம் வரையும் இலங்கை குடியரசால் அவரின் கணக்கில் செலவு செய்யப்பட்ட முழுத்தொகையையும் மீளளிப்புச் செய்யவும் ;

(ii) மேலே பெயர் குறிப்பிடப்பட்ட விண்ணப்பகாரர் அதிகாரிகளினால் (துர்நடத்தை காரணமாக அல்லது அவருடைய கட்டுப்பாட்டுக்குட்பட்ட பிரகாரணங்களின் நிமித்தம்) சேவையில் வைத்திருப்பதற்கு தகுதியற்றவரென அறிக்கை செய்யப்பட்டால் அவரின் கணக்கில் இலங்கை குடியரசால் செலவழிக்கப்பட்ட எல்லாச் செலவுகளையும் மீளளிப்புச் செய்யவும்.

————,
பெற்ரூரின் அல்லது பாதுகாவலரின் கையொப்பம்.

தேதி :————.

பெயர் :————.

(தனிப்பேரெழுத்துக்களில்)

முகவரி :————.

சாட்சிகளின் கையொப்பம் :————.

பெயர் :————.

(தனிப்பேரெழுத்துக்களில்)

முகவரி :————.

*(பொருத்தமற்றவற்றைக் கிறிகிடவும்).

பி. எச். மெண்டிசு,
வான்படைத் தளகர்த்தர்,
வான்படை முனேஞன்.

தலைமையகம்,
இலங்கை வான்படை,
அ. அ. பெட்டி, 594,
கொழும்பு,
1973 ஆகஸ்ட் 10.

8-480—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

இல. 1/92/31 (ஜீ).

**அரசாங்க சுருக்கெழுத்தாளர் சேவையின் விசேட தரத்திற்குப் பதவியேற்றம்**

அரசாங்க சுருக்கெழுத்தாளர் சேவையின் உயர்தரத்திலுள்ள பின்வரும் உத்தியோகத்தர்களை அவர்களின் பெயர்களுக்கெதிராக குறிக்கப்பட்டுள்ள தேதிகள் தொடக்கம் விசேட தரத்திற்குப் பதவியேற்றம் செய்யப்பட்டுள்ளமையை அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி, உண்ணுட்டலுவல்கள் அமைச்சர் அங்கீகரித்துள்ளார் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| | பெயர் | அமைச்சு/திணைக்களம் | திகதி |
|---|---|---|---|
| 1. | திரு. எம். டி. டி. ஆர். குணதிலக .. | வியாபாரம் .. .. | 18.11.1971 |
| 2. | திரு. வி. தேவதாசன் .. | தொழில் .. .. | 14.09.1972 |
| 3. | திரு. ஆர். எம். டபிள்யு. பெரேரா .. | மாவட்ட நீதிமன்றங்கள் கொழும்பு .. | 31.01.1973 |
| 4. | திரு. எஸ். பெர்ணாந்து .. | வேதன பதவியணி ஆணைக்குழு .. | 25.02.1973 |
| 5. | திரு. ஜே. எச். எஸ். எஸ். ஜெயசுந்தரா | நீதவான் மன்று, ஹோமகம .. | 28.02.1973 |
| 6. | திருமதி எல். எம். டி. ஏ. ஜெயகொடி | உள்நாட்டு இறைவரி .. .. | 01.04.1973 |

பி. எச். சிறிவர்தன,
செயலாளர்,
அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி,
உண்ணுட்டலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிருவாகத் திணைக்களம்,
(இணைந்த சேவைகள் பகுதி),
டொறிங்டன் சதுக்கம்,
கொழும்பு 7.
1973 ம் ஆண் யூலை மீ 31 ந் உ.

8-496—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப் படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும அவ்வவ்வர்த்தமானி களுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **ஒகத்து** | 3.8.73 | வெள்ளி | 25.7.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 10.8.73 | வெள்ளி | 1.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 17.8.73 | வெள்ளி | 8.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 24.8.73 | வெள்ளி | 15.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 31.8.73 | வெள்ளி | 22.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| செத்தெம்பர் | 7.9.73 | வெள்ளி | 29.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 14.9.73 | வெள்ளி | 5.9.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 21.9.73 | வெள்ளி | 11.9.73 | செவ்வாய் | ந.ப. 12.00 |
| | 28.9.73 | வெள்ளி | 19.9.73 | புதன் | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்.**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1973 ம் ஆடு ஒகத்து மீ 18 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.